Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

# அபிவிருத்தி நிருவாகம்

சுதுவை. நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி நிருவாகம்

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

125455C

கலாநிதி
சுதுவை கா. ச. நாதன் எம் ஏ. பி எச் டி.

பொருளியல் துறை
யாழ்ப்பாணம்
பல்கலைக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு: அபிவிருத்தி நிருவாகம்.

ஆசிரியர்: கலாநிதி எஸ். கே. எஸ். நாதன்.

முதற் பதிவு: சித்திரை 1998

பதிப்புரிமை: ஆசிரியருக்கே.

நூல் அச்சுப் பதிவு: யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகம்.

விலை:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

கலாநிதி எஸ். கே. எஸ். நாதன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நீண்டகாலமாக அரசறிவியல் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். அண்மையில் பதவியிலிருந்து இளைப்பாறிய அவர் எமது பல்கலைக்கழகத்திற்கு அதிதி விரிவுரையாளராகத் தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றார். அரசறிவியலில் சிறந்த கல்விமானாகிய இவர் சிறந்த கற்பிக்கும் போக்குக் கொண்டவர். அரசறிவியலில் பல ஆராய்ச்சிக் கட்டுரை களையும் நூல்களையும் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள் ளார். இவரது ஆக்கங்களுக்கு இலங்கையிலும் உலகத்தில் பல நாடுகளிலும் நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது.

தற்பொழுது இவருடைய அபிவிருத்தி நிர்வாகம் என்ற நூல் வெளியிடப்பட இருக்கின்றது. இந்நூல் இன்றைய காலத் தின் தேவைக்கு மிகவும் பொருத்தமானதாக அமைகின்றது. மேலும், இவ்வாறான பல நூல்களை வெளியிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

**பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை**
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் முகவுரை.

இரண்டு ஆண்டுகள் யாழ். பல்கலைக்கழக பட்டப் பின் படிப்பு டிப்ளோமா கற்கை நெறிக்கும், அரசறிவியல் சிறப்புக்கலை இறுதி ஆண்டிற்கும் அபிவிருத்தி நிருவாகத்தில் கற்பிக்கும் அனுபவத்தின் அடிப்படையிலும் இச் சிறு நூலினை உருவாக்கியுள்ளேன். அபிவிருத்தி நிருவாகத்தில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கும் பொது நிருவாகிகளுக்கும் புத்திஜீவிகளுக்கும் இது பயன்படும் என நம்புகிறேன்.

''அபிவிருத்தி நிருவாகம்'' என்பது மிக பரந்துபட்ட ஆய்வுத்துறையாகும். இது சம்பந்தமான ஆய்வுகள் கொழும்பிலும் சென்னையிலும் பல வெளிவந்துள்ளன. இதற்கான கட்டுரைகள் மாத சஞ்சிகைகளில் வெளிவருகின்றன. அபிவிருத்தி நிருவாகம் என்ற சஞ்சிகை ஸ்ரீலங்கா பொது நிருவாக அக்கடமியினால் வெளியிடப்படுகிறது. இந்த வகையில் மிகவும் பயனுள்ள துறையாகவும் கற்கை நெறியாகவும் அண்மைக் காலங்களில் உருவெடுத்துள்ளது நமது மாணவர்களும் இதனால் பயன்பெறவேண்டுமென்ற உந்துசக்தியினால் இதனை வெளியிடுகின்றேன்.

இச் சிறு நூலின் மூலமாக நமது சமூகத்திற்கு மிகவும் வேண்டப்படுவதான அபிவிருத்தி நிருவாகம் பற்றிய சில கருத்துக்களை முன்வைத்துள்ளேன். இது பற்றிய கருத்துக்களை ஆர்வத்துடன் எதிர்பார்க்கின்றேன். இதற்கு அணிந்துரையும் ஆசியுரையும் வழங்கிய பெரியவர்களுக்கு நன்றி கலந்த வணக்கங்கள்.

*20–04–1998*

சுதுமலை

**ச. கா. ச. நாதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# அபிவிருத்தி நிருவாகம்

உலகின் பல பாகங்களிலும் இன்று அபிவிருத்தி நிருவாகத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின் பல சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சனைகள் தோன்றின. இவற்றிற்கு முகம் கொடுத்து பல்வேறுபட்ட சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அபிவிருத்தி நிருவாகக் கோட்பாடு முன் வைக்கப்பட்டது.

இரண்டாவது உலகப்போர் முடிவடைந்த பின்பு உலகின் பல பாகங்களிலும் காலனித்துவ ஆட்சிகள் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டு எங்கும் சுதந்திர நாடுகள் உதயமாகின. ஆசியாவில் இந்திய விடுதலைப்போர் பிற ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு உந்துசக்தியாக விளங்கியது. அவ்வாறு 1950 கள்ல் சுதந்திரம் பெற்ற நாடுகளில் பல வகைப்பட்ட அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சனைகள் தலை தூக்கின. இந்தியா - பாக்கிஸ்தான் நாடுகளில் மத வெறியாட்டங்களும் இனப்போர்களும் மூண்டன. இவற்றை சமாளிக்க இயலாமல் நிருவாக கட்டமைப்புகள் திண்டாடின.

"புதிய அரசுகள்" என்றழைக்கப்பட்ட ஆசிய ஆபிரிக்க நாடுகள் பல்வேறுவகைப்பட்ட வெளியார் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டவை ஆகும். பிரித்தானியர், பிரெஞ்சுக்காரர், போர்த்துக்கல் டச்சுக்காரர் என வெவ்வேறு காலனித்துவ ஆட்சியின் கீழ் அரசியல் அடிமைகளாக இருந்தனர். முந்தைய ஆட்சியாளர் உருவாக்கிய பொது நிருவாகக் கட்டமைப்பானது நாட்டுக்கு நாடு வேறுபட்டதாக இருந்தது. எனினும், இவற்றுள் பிரித்தானியர் ஆட்சியே இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற பல நாடுகளில் நிலவி வந்தது. அது தனது நீண்ட கால அரசியல் அனுபவத்தில் பல சுதேசிய மக்களுக்கு தன்னாட்சி, மக்களாட்சி மற்றும் பிரதிநிதித்துவ ஆட்சி முறைகளில் ஊட்டி வந்திருக்கிறது. அது மட்டுமன்றி, ஓரளவு சட்டத்தின் வல்லாட்சியை அறிமுகப்படுத்தி வலுவான நிருவாக அமைப்புக்களையும் உருவாக்கி இருந்தது.

புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் பலவும் அபிவிருத்தி அடையாத அல்லது "குறைவிருத்தி" நாடுகளாகவே கணிக்கப்பட்டன. இங்கு வாழும் மக்கள் பலர் உணவு, உடை, உறையுள் இன்றி காலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் கடுமையான சிற்றத்திற்கு உள்ளாகி வாழ்கின்றனர். 1978 இல் உலக வங்கி வெளியிட்ட அறிக்கையில் இன்னமும் வளர்முக நாடுகளில் 40 சதவீதமான, அதாவது 800 மில்லியன் மக்கள் முழு அளவிலான வறுமையில் உழல்கின்றனர். இதனை "வறுமை" அல்லது "ஏழ்மை" என்று பொதுவாகக் கூறினாலும் இம்மக்கள் சொல்லொணாத் துன்பத்தில் வாடுகின்றனர். இவர்களுக்கு போஷாக்குள்ள உணவு கிடைக்காததால் நோயும் நோய் எதிர்ப்புசக்தி இல்லாமையும் காணப்படுகிறது. இவர்களில் பலர் இளமையில் இறந்துவிடுகிறார்கள்; அடிப்படை வசதிகள் இல்லாததால் கல்வி அறிவு காணப்படுவதில்லை; வாழ்க்கைத் தரமும் மிகவும் தாழ்வாகவே உள்ளது, இவையே ஒரு சமூகத்தின் அபிவிருத்தியற்ற நிலைக்கு இலக்கணமாகும்.

மேற்குறிப்பிட்ட குறைபாடுகளை நீக்கவும், தனிமனித வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், சமுதாயத்தின் நலன்களை முன்னெடுத்துச் செல்லவும் " அபிவிருத்தி " வலியுறுத்தப்படுகிறது. காலம் காலமாக வறுமையில் வாடிய மக்களுக்கு அபிவிருத்தி அன்றி வேறொரு மார்க்கம் இல்லை. அதுவும் ஜனநாயக முறையிலான அபிவிருத்தி, மக்களால் வகுத்து வழிநடத்தப்படும். அபிவிருத்திக்கு ஈடு இணை வேறு இல்லை. எப்படிப் பார்த்தாலும் " அபிவிருத்தி " என்பது மக்களுக்கே; அந்த நிலையில் மக்களே அதில் பங்கு கொள்ளவும் வேண்டும்.

## அபிவிருத்திக்கான அணுகுமுறைகள்

" அபிவிருத்தி " எல்லோராலும் விரும்பப்படும் ஒரு நிகழ்வாக உள்ளபோது, அதற்கான அணுகுமுறைகள் வெவ்வேறாகக் காணப்படுகிறது. பொதுவுடமை நாடுகளில் அரசியல், சமூக பொருளாதார அபிவிருத்தி, பொதுவுடமைக் கட்சிகளின் வழி நடத்தலில் ஏற்படுகிறது. வலுவான ஒருமுகப்படுத்தப்பட்ட கட்சியின் கட்டுப்பாட்டில் அபிவிருத்திக்கான நோக்கங்களை வரையறை செய்தல், திட்டமிடுதல் அமுல்படுத்தல் என்பன நடைபெறுகின்றன. இங்கு பொது நிருவாக அமைப்பும் பொதுவுடமைக் கட்சியின் ஒரு அங்கமாகவே விளங்குகின்றது.

பொதுவுடமைப் புரட்சியின் தாக்கத்திற்குள்ளான சனநாயகவாதிகள் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையாக சமத்துவமும் சமூகநலன்களும் இருக்க வேண்டுமென்றார்கள். ஆபிரிக்க நாடுகளான கானாவில் நிக்குருமாவும் தன்சானியாவில் நைரேரேயும் தங்கள் சொந்த வழிகாட்டலில் பாராட்டத்தக்க பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திகளை ஏற்படுத்தினார்கள். இவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்கள் தமது தனித்தன்மையைப் பயன்படுத்தி அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டாலும் அவை நீண்டகால மற்றும் தொடர்ச்சியான அபிவிருத்தியினை ஏற்படுத்துவதில்லை.

ஆகவே மக்களாட்சி நிலவும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் அபிவிருத்திக்கான குறிக்கோள்களை வகுப்பதிலும், திட்டங்களை அமுல் செய்வதிலும் மக்கள் பெரும் பங்கினை வகிக்கிறார்கள், அபிவிருத்தி என்பது பொருள் வளம், பணவளம், மக்கள் வளம் என்பவற்றை ஒழுங்கான முறையில் பயன்படுத்தி மக்களுடைய வாழ்க்கை தரத்தை உயர்த்துவதும், சமுதாயத்தில் தேவைகளுக்கேற்ற செல்வத்தை உற்பத்தி செய்வதுமாகும். என வரைவிலக்கணம் கூறுகிறார்கள். புதிய அரசுகள் பெற்ற அரசியல் சுதந்திரத்திற்கு உறுதுணையாக பொருளாதார சுதந்திரம் வற்புறுத்தப்படுகிறது.

இதன்படி அபிவிருத்தியின் நோக்கம் " மக்களுடைய " வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது; அபிவிருத்தியின் பங்காளிகள் மக்களே யாவர், ஆகவே அபிவிருத்தியில் முன்னின்று உழைப்பவர்களும் அவர்களே; மக்களாட்சி அரசியல் அமைப்புக்கள் மிகச் சிறந்ததாக கருதப்படுவதற்கு காரணம், மக்கள் எல்லா நிலைகளில் பங்களிப்புச் செய்யக் கூடியதாக இருக்கிறது. ஜனநாயகத் தேர்தல்கள் மூலம் அரசியல் அபிவிருத்தி ஏற்படுகிறது. பொருளாதார திட்டமிடுதல் மூலம் மிக பெருவாரியான மக்கள் வாழ்க்கைத்தரம் சீரடைகிறது. ஒழுங்கான பொருளாதார பங்கீட்டின் மூலம் சமூக ஒற்றுமையும் சமூகப் பண்பாடும் வளருகின்றது. மனிதர்கள் தனிமனிதர்களாக அல்லாமல், நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்புக்கள் மூலம் செயற்படுவதால் தேசிய நலன் பாதுகாக்கப்படுகிறது. ஆகவே ஜனநாயக முறையிலான அபிவிருத்தியே உயர்ந்ததாக போற்றப்படுகிறது.

## அபிவிருத்தி நிறுவனங்கள்

நிறுவனங்கள் மக்களின் செயற்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாதவையாகும். இவையின்றி எந்த செயல்பாடும் நடைபெற இயலாது அபிவிருத்தி நிருவாகத்திலும் நிறுவனங்களின் பங்கு வலியுறுத்தப்படுகின்றது. இன்று சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும் நிறுவனமயப்படுத்தல் நடைபெறுகின்றது. முன்பு விவசாயம் போன்ற தொழில்கள் மக்கள் தங்கள் விருப்பப்படி பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் இன்று அரசாங்க மட்டத்தில் பல நிறுவனங்கள் தோன்றி, விவசாயினை வழிநடத்துகின்றன, விவசாயியும் தனது தேவைகளைப்

பூர்த்தி செய்வதற்கு பெரும்பாலும் இவற்றையே நம்பியிருக்கிறார். மேலும் பண உதவி மற்றும் தொழில்நுட்ப உதவி போன்றவற்றிற்கு எண்ணற்ற விவசாய நிறுவனங்களை நம்பியிருக்கின்றார். இந்த நிறுவனங்களும் விவசாயியும் ஒன்றிணைந்து விவசாய அபிவிருத்தியினை ஏற்படுத்துகின்றனர். இதுபோன்று கைத்தொழில்கள், தொடர்பு சாதனங்கள் மற்றும் நிதியமைப்புக்கள் யாவும் நிறுவனமயப்படுத்தப் பட்டு அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்கின்றன.

நிறுவனமயப்படுத்தல் மூலம் பல தொழில் தலைவர்கள் அல்லது முகவர்கள் உருவாகின்றார்கள். இங்கு நிறுவன ரீதியான சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. பொருளாதார மற்றும் சமூக அமைப்பில் இத்தகைய முகவர்களால் பெரும் நன்மைகள் ஏற்படுகின்றன. நிதி நிறுவனங்களிடமிருந்து உதவிகள் பெறுவதற்கும் நிறுவனத்தில் இலாபகரமான செயற்பாட்டிற்கு வழி ஏற்படும். அபிவிருத்தி என்பது பல துறைகளிலும், பல நிலைகளிலும் வளர்ச்சியை ஏற்படுத்துவதால் நிறுவனமயப்படுத்தல் ஒரு முக்கியமான செயலாகும். அபிவிருத்தி நிருவாகத்தில் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்கள் பற்றிய விபரம் பின்பு ஆராயப்படும்.

## அபிவிருத்தியின் நோக்கம்

அபிவிருத்தி நிருவாகம் என்ற சொற்பதம் "பொது நிருவாகம்" பற்றிய பாரம்பரிய கருத்தினின்றும் வேறுபட்டது என்பதை உணர்த்துகின்றது. பொது நிருவாகம், சட்டம், ஒழுங்கு பிரச்சனைகளோடு தொடர்புடையது. எனினும், அது ஆட்சியாளர்களுக்கு வரிகளை சேர்த்துக் கொடுக்கும் அமைப்பு என்றும் கருதப்பட்டது. அபிவிருத்தி நிருவாகமானது ஒரு அரசாங்கம் தனது சமூகப் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு பயன்படுத்தப்படும் நிருவாக அமைப்பு என்பதாகும். ஆகவே அபிவிருத்தி நிருவாகம் அதன் குறிக்கோள்கள், நடைமுறைகள் மற்றும் கருத்துக்கள் என்பவற்றால் சிறப்புப் பெற்றதாகும் என ஜோர்ஜ். எவ் கான்ற் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பலதரப்பட்ட தேவைகளைப் பூர்த்திசெய்ய பொதுநிருவாகம் பயன்படுகிறது. உதாரணமாக, சட்டம், ஒழுங்கை பாதுகாக்க; காவல் துறை. நீதித்துறை என்பவற்றின் செயற்பாட்டிற்கு; வெளிநாட்டு ராஜதந்திரிகளின் அலுவல்களைக் கவனிக்க என இவ்வாறு பொது நிருவாகம் சமுதாயத்தின் பொருளாதார–சமூக அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்தகைய அக்கறையின் மூலமே தாழ்வுற்று இருக்கும் மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்த இயலும் என நம்புகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் முக்கியத்துவத்தினை உணர்ந்த உலகின் பல பாகங்களிலும் உயர் ஆய்வு நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தாய்லாந்து, மலேசியா, இந்தியா ஆகிய நாடுகளில் அபிவிருத்தி நிருவாக ஆய்வு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் அபிவிருத்தி நிருவாகம் பற்றிய கற்கை நெறிகள் கடந்த முப்பது வருடங்களாக நடைமுறையில் உள்ளன. இன்று அபிவிருத்தி நிருவாகக் கோட்பாடுகள், அவற்றின் முக்கியத்துவம் காரணமாக பல அரசுகள் மிகத் தீவிரமாக நடைமுறைப் படுத்துகின்றன.

இந்தக் கோட்பாட்டின்படி அபிவிருத்தியில் ஈடுபடும் நிருவாகிகள் அபிவிருத்திக் கோட்பாட்டினை தலையாய இலட்சியமாக கொள்ள வேண்டும். அபிவிருத்தியின் நோக்கம் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது எனப் பொதுவாக ஏற்றுக் கொண்டால் அதனோடு தொடர்புடைய பல விஷயங்களை உள்வாங்க வேண்டும். அதாவது, மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் எனில் தேசிய பொருளாதாரத்தில் வளர்ச்சி கண்டு தேசிய வருமானம் உயரவேண்டும்.

அதாவது அபிவிருத்திக்கு அடிப்படையாக நவீனத்துவம், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி என்பன அபிவிருத்தி கூறுகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். கைத்தொழில் மயமாக்கல், விவசாயத்தில் விஞ்ஞான அணுகுமுறைகள் என்பன பின்பற்றப்பட வேண்டும். போக்குவரத்து தொடர்புகள். சாலைகள் தெருக்கள் என்பன சீர் செய்யப்பட வேண்டும். இவற்றை ஏற்படுத்தவும், மேற்பார்வை செய்யவும் புதிய அரசாங்க நிருவாகத்துறைகள் தேவைப்படும். அவற்றிற்கு மேலதிகமான அபிவிருத்தி இலட்சியத்தைக் கொண்ட நிருவாகிகள் உருவாக்க பொது நிருவாக ஆய்வு மையங்கள் தோற்றுவிக்கப் படவேண்டும். இத்தகைய அறிவியல் ஆராய்ச்சி மையங்கள் இந்தியா, மலேசியா போன்ற வளர்முக நாடுகளில் நிறுவப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் தேசிய அபிவிருத்தி சம்பந்தமான ஆய்வுகளும், சேவைக்குத் தேவையான பணியாளர்களைப் பயிற்றுவிக்கும் பணிகளும் தொடருகின்றன. அபிவிருத்தி சம்பந்தமான கோட்பாடுகளை வகுப்பவர்கள் அரசியலாளர்களாவார்; ஆனால் அவற்றை நடைமுறைப் படுத்துபவர்கள் நிருவாக சேவைப் பணியாளர்களேயாவர். ஆகவே இவர்களைப் பயிற்றுவிக்கும் முக்கிய பங்கினை பொது ஆட்சி ஆய்வு நிறுவனங்கள் செய்கின்றன. அதனால் பல்கலைக்கழகங்கள் போன்ற வளர்முக நாடுகளில் ஆய்வு நிறுவனங்களும் சிறப்பான இடத்தை வகிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# திட்டமிடுதலும் அதற்கான அமைப்புகளும்

அபிவிருத்திக்கான நிருவாகம் என்பது சமுதாயத்தின் பல நிலைகளிலும் அபிவிருத்திகளை ஏற்படுத்துவதற்கு முன் கூட்டியே திட்டம் தீட்டிச் செயற்படுவதாகும். இதற்காக அரச நிருவாக அமைப்பில் முகாமைத்துவப் பண்புகள் முன் கொணரப்பட வேண்டும். இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்பு, அதாவது, முக்கியமாக சோவியத் தொன்றியத்தின் ஆரம்பகால திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்குப் பின்பு, இத்தகைய திட்டமிடல் பணிக்குழுக்கள் உலகில் பரவலாக எல்லா நாடுகளிலும் உருவாக்கப்பட்டுள்ளன. சுதந்திரமடைந்த இந்தியாவின் தலைவர்கள் திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்தியை வற்புறுத்தி தேசிய திட்ட ஆணைக்குழுவினை நிறுவி 1950ஆம் ஆண்டு முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தினை முன் வைத்தார்கள். இப்பொழுது இந்தியாவின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறையிலிருககிறது.

## திட்டமிடும் ஆணைக்குழு

திட்டமிடுதல் என்பது ஒரு நிருவாக செயற்பாடு என்பதோடு அதற்கான ஒரு நிறுவனம் உருவாக்கப்படல் வேண்டும் என்பதும் இன்றியமையாததாகும். ஒரு ஜனநாயக நாட்டில் இந்த திட்டமிடல் நிறுவனம், அதாவது திட்டமிடல் ஆணைக்குழு பாராளுமன்றத்தினால் நியமிக்கப்படுகிறது. அதற்கு சட்ட வலுவும், சுதந்திரமான செயற்பாட்டிற்கான சூழ்நிலையும் அளிக்கப்படுகிறது. இத்தகைய ஆணைக்குழு ஒரு முகப்படுத்தப்பட்ட நிலையில் ஒரு மைய நிருவாக அமைப்பையும், அதற்கான தலைவரையும் கொண்டு இருக்கும். அதற்கு உதவியாகவும், பங்காளிகளாகவும், மாகாண அல்லது மாவட்ட நிலையில் உபகுழுக்கள் விளங்கும் அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்ட நிலையில் இவை மைய திட்டமிடல் ஆணைக்குழுவிற்கு உதவியும் ஒத்தாசையும் புரிகின்றன.

இன்று எல்லா அரசுகளும் பொருளாதார - சமூக அபிவிருத்தியில் நாட்டம் கொண்டவையாகவேயுள்ளன. தத்தமது மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், மக்களின் தேவைகள் மற்றும் வசதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பெருக்கவும் ஏற்ற வகையில் ஒவ்வொரு அரசும் செயற்படுகின்றன. கல்வி வசதிகள், வேலை வாய்ப்பு என்பவற்றை பெருக்க முயலுகின்றன. இவற்றிற்கான ஒட்டுமொத்தமான திட்டத்தை வகுப்பதே திட்ட ஆணைக்குழுவின் கடமையாகும். ஒவ்வொரு நாடும் தனது சட்ட திட்டங்களுக்கேற்ப அபிவிருத்திக்கான வழிவகைகளை முன்கூட்டியே வெளியிடுகின்றன. நாட்டில் கிடைக்கக்கூடிய மூலவளங்கள், ஆளணி என்பவற்றை மதிப்பீடு செய்வது முதல் கடமையாகும். இதற்கு அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையும் அல்லது திணைக்களமும் பங்களிப்புச்செய்ய வேண்டும்.

பொருளாதார அபிவிருத்திக்கான திட்டமிடல் கொள்கை பின்வரும் வழிமுறைகளைக் கொண்டிருக்கும் என பேராசிரியர் ஜார்ஜ் எப். கான்ற் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

1. தமது குறிக்கோள்களை முதலில் தெரிவு செய்து கொள்ளுதல்,

2. பொருளாதார நடவடிக்கைகளில் பெரும் பங்கு வகிக்கும் பொருளியல் கூறுகளை மதிப்பீடு செய்தல்; முக்கியமாக நாட்டின் சேமிப்பு, முதலீடு, உற்பத்தி, நுகர்ச்சி, வெளிநாட்டு வாணிபம் என்பன :

3. அபிவிருத்திக்கான வழிமுறைகள், கோட்பாடுகள் ஆகியவற்றை முதலிலேயே வகுத்துக் கொள்ளுதல்.

பெரும்பாலும் பொதுவுடமைப் பாதிப்புடைய சோசலிச நாடுகள் முழுமையான மையப்படுத்தப்பட்ட, ஒருங்கிணைந்த திட்டமிடும் கொள்கைகளைப் பின்பற்றுகின்றன. முன்னாளைய சோவியத்தொன்றியத்தின் செல்வாக்கின் கீழ் அமைந்த நாடுகள் இத்தகைய மையப்படுத்தப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளைக் கைக்கொள்ளுகின்றன. இங்கு முதலீடுகளும் பெரும்பாலும் அரச முதலீடுகளாகவே அமையும். மேலும் தனியார்துறைகள் அரச கட்டுப்பாட்டுக்குள் அமைந்திருக்கும்.

## வழிகாட்டல் முகவர்

திட்டமிடல் ஆணைக்குழு தேசிய சட்டசபையினால் நியமிக்கப்படுகிறது. மேலும், அதற்கான அறிவுறுத்தல்கள் அரசியல் தலைமைப் பீடத்தினால் வழங்கப்படுகின்றது. கொள்கைகள், கோட்பாடுகள் பற்றி வரையறை செய்யும் அதிகாரம் திட்டமிடல் ஆணைக்குழுவிற்குக் கிடையாது. அது ஒரு முகவர் அமைப்பேயாகும். திட்டமிடும் நோக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம், அடிப்படை அலகுகள் அபிவிருத்திகள் என்பனபற்றி பாராளு மன்றமோ அல்லது அமைச்சர் அவையோ தான் தீர்மானிக்கின்றன. மேற்படி அமைப்புக்களால் உருவாக்கப்பட்ட தேசிய திட்டமிடல் ஆணைக்குழு, அபிவிருத்திக்கான தரவுகளையும் வழிகாட்டல்களையும் வழங்குகிறது.

மேலும், திட்டமிடல் ஆணைக்குழுவிற்கு இணையான பணிகளை வேறும் சில நிருவாக அலகுகள் செய்கின்றன. உதாரணமாக ஒவ்வொரு அரசாங்க திணைக்களமும், வருடாந்த வளர்ச்சிக்கான வழிவகைகளை முன் வைத்துச் செயற்படுகின்றன. கல்வித் திணைக்களமோ அல்லது விவசாயத் திணைக்களமோ இவ்வாறு காலவரையறைக்குட்பட்ட திட்டங்களை வகுத்துக் கொள்ளுகின்றன. ஆனால் இவை தத்தமது துறைகளோடு நின்றுவிட தேசிய அபிவிருத்தியில் முழுமையாக ஈடுபட்டு இருக்கிறது. திட்டமிடல் ஆணைக்குழு அதனால் தான் இத்தகைய அமைப்பின் தலைமைப் பீடம் பிரதம நிருவாகியின் அலுவலகத்தோடு நிறுவப்பட்டுள்ளமையினை இந்தியாவிலும், மலேசியாவிலும் காணலாம். ஆகவே தேசிய திட்டமிடல் பணியானது பிரதம நிருவாகியின் அதிகாரத்துடனும் மேற்பார்வையின் கீழும் செயற்படுகின்றது.

தேசிய திட்டமிடல் ஆணைக்குழு ஒரு வழிகாட்டும் முகவர் அமைப்பு என்பதோடு, அது பின்வரும் கடமைகளிலும் ஈடுபடுகின்றது. இதன் அடிப்படை நோக்கம் தேசிய அபிவிருத்தியாகும்; அதாவது பொருளாதார – சமூக – அரசியல் அபிவிருத்தி என வகுக்கப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சித் திட்டங்கள் முழுமையான நாட்டிற்காகவும் இருக்கலாம்.. அல்லது வரையறுக்கப்பட்ட பொருளாதார அலகுகளுக்காக இருக்கலாம், அதாவது, கைத்தொழில் வளர்ச்சி, விவாசாய வளர்ச்சி அல்லது கல்வி வளர்ச்சி என குறுகிய அளவிலாகவும் அமையலாம்.

இவ்வாறு திட்டமிடும் பணி ஒரு தனி மனிதனுடையது அல்ல; அது ஒரு தடவையில் முழுமையாகச் செய்யப்படும் பணியும் அல்ல, மாறாக, திட்டமிடும் செயல் தொடர்ச்சியாக, பலராலும், நிருவாக அமைப்பின் வெவ்வேறு நிலைகளிலும் மேற்கொள்ளப்படுவதாகும். காலநிலை, உலக அரசியல் நிலை என்பனவற்றிற்கு ஏற்ப அவ்வப்போது மாற்றங்கள் ஏற்படுவதும் இயற்கை, உதாரணமாக பணவீக்கம் காரணமாக விலை உயர்வு ஏற்படும் போது, தேசிய பொருளாதாரத்தில் தாக்கங்களை விளைவிக்கிறது, இதனால் திட்டமில் ஆணைக்குழு தாம் வரையறை செய்த அலுவல்களை மறு பரிசீலனை செய்வதோடு முதலீடு மற்றும் செலவினங்களையும் மறுசீரமைக்க வேண்டி ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார — சமூக திட்டமிடலுக்கு அவசியம் வேண்டப் படுவது தரவுகள் ஆகும். கைவசமுள்ள முதல், ஆள் — அணி என்பன பற்றி தெளிவான புள்ளிவிபரம் வேண்டப்படுகின்றது. முதலீடுகள், மக்களுடைய மூலதனம் வெளிநாட்டு உதவிகள் முதலீடுகள், சேமிப்புகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு இன்றியமையாத மனிதவளம்,நாட்டின் சனத்தொகைபற்றிய ஆய்வுகள், வேலைவாய்ப்புக்கள், மனித மேம்பாட்டிற்கான வாய்ப்புகள் கல்விப் பரம்பல் போன்ற அடிப்படை தரவுகள், புள்ளிவிபரமாக அறியப்படவேண்டும். பல நிலைகளிலும் ஆய்வு நடைபெற்று அபிவிருத்திக்கான படிநிலை அமைப்புக்களை தீர்மானித்துக் கொள்ளுதல் வேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக பல வளர்முக நாடுகளில் இத்தகைய ஆய்வுகள் நடைபெறுவதுமில்லை. அதற்கு உதவுபவராக நிருவாக அலுவலர்கள் இருப்பதமில்லை. இதனால் நன்றாக உணரப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் வெளிச்சத்துக்கு வராமல் நின்று விடுகின்றன.

## வளர்ந்துவரும் அபிவிருத்திப்பணிகள்

இப்பொழுது வளர்முக நாடுகள் பலவற்றிலும் அபிவிருத்திப் பணிகள் பன்மடங்கு பெருகியுள்ளன. வளர்முக நாடு என்பதற்கு வரைவிலக்கணமே இந்த அபிவிருத்திப் பணிகள் தாம் மிகவும் உயர்வான சமூக மற்றும் பொருளாதார பலாபலன்களை தமது மக்களுக்கு வழங்குவதற்காக ஒவ்வொரு அரசும் பல திட்டங்களைத் தீட்டி செயற்படுகின்றன. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு புதிய அமைப்புகளும் கிளை ஸ்தாபனங்களும் தொழிற்பாட்டு அலகுகளையும் நிறுவுகின்றன. உலக அமைப்புகளான ஐ. நா., எவ். ஏ. ஓ. யூனிசெவ், அங்கராட் என்பனவும், வேறுபல உலக நிறுவனங்களும் சேர்ந்து உதவுகின்றன.

இவ்வாறு வளர்ந்துவரும் பல்வேறுபட்ட நிறுவனங்கள், அமைப்புகளிடையே ஒற்றுமையும் ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்தும் சிரமமான காரியங்களை தேசிய திட்டமிடல் ஆணைக்குழு செய்கின்றது. தனது செயல் திறனையும் ஒருமித்த சாதனைகளையும் பாராளுமன்றங்கள் மூலம் வெளி உலகிற்கு அறியத்தருகின்றன. இதற்கு தொடர்பு சாதனங்களும் பயன்படுகின்றன. கவர்ச்சியான முறையில் செய்திகளை வெளியிடவும், மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் ஒலிபரப்பு மற்றும் ஒலிபரப்பு சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு வகையில் ஆராய்ந்தோமானால், இந்த நூற்றாண்டில் சாதனை விளைவித்தகணணிப்பொறிமயமாகும் தொடர்பு சாதனங்கள் எல்லா அபிவிருத்திச் செயற்பாடுகளையும் உறுதி செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# அபிவிருத்திக்கான கல்விக் கொள்கை

அபிவிருத்திக்கான திட்டங்களும் செயல்பாடுகளும் பொருளாதார சமூக அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், அவை மனித வாழ்வு மேம்பாடு அடைய உதவுகின்றன. இதில் தேசிய மட்டத்தில் பின்பற்றப்படும் கல்விக் கொள்கை பற்றி ஆராய வேண்டும் ஏனெனில், சகல அபிவிருத்திகளுக்கும் கல்விதான் அடிப்படையாகும். சரியான கல்விக் கொள்கை இரண்டுவிதமான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. ஒன்று, அடிப்படைக்கல்வியறிவு பரவலாக்கப்பெற்று, தேசத்தின் மொத்த சனத்தொகையில் பெரும்பாலான அளவு கல்வியறிவு பெற்றவர்களாகிறார்கள். இரண்டாவதாக, தேசிய அபிவிருத்திக்கான ஆள்பலத்தை அது வழங்குகிறது. அதாவது. கல்விக் கொள்கை என்பது பொதுதராதரத்தையும், நுட்பமான தொழில் சார்ந்த அறிவையும் வளர்க்க உதவவேண்டும்.

ஆகவே சமூக — பொருளாதார அபிவிருத்தியுடன் இணைந்து செல்வது கல்வி அபிவிருத்தி. இவை இரண்டும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவையாகும். கல்வித்திட்டமிடுதலில் பொது அறிவு வளர்ச்சிக்கும் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் திட்டமிடல் வேண்டும். பரந்த பொது அறிவு வளர்ச்சி பெற்ற மக்களால்தான் அபிவிருத்தி சம்பந்தமான விடயங்களை கிரகித்துக் கொள்ள இயலும். சமூக — பொருளாதார மற்றும் அரசியல் அபிவிருத்தியின் தேவைகளை உணர்ந்து அதற்கான ஒத்துழைப்பினை வழங்குவார்கள். அபிவிருத்தி சம்பந்தமான செயற்பாடுகள் தமக்காகவே என்பதனை உணர்ந்து பொதுமக்கள் அவற்றிற்கு பங்களிப்புச் செய்வார்கள். சமூக அபிவிருத்தி செயற்பாடுகளிலும் பங்காளிகளாக சேர்ந்து கொண்டு உதவுவார்கள்.

இந்தியாவில் கேரளா மாநிலம்,, மேற்கு வங்காளம் போன்றவற்றில் படிப்பறிவு பெற்றோர் 85 சதவிகிதத்திற்கு மேலாக இருப்பதால் அங்கு வளர்ச்சித்திட்டங்கள் பெருமளவில் செயற்படுத்தப்படுகின்றன. எல்லா சமூகங்களிகிடையேயும் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு மேலும் பொது நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவுகின்றன. எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுக்கல்வி, பொது அறிவு என்பவற்றின் ஊடாக தேசிய அபி விருத்திக்கான மனநிலை பரவலாக்கப்படுகிறது. இது, தொழில்நுட்ப வியலாளருடனும், அதிகாரிகளுடனும் சேர்ந்து செயற்படும் ஒரு பிர மாண்டமான சமுதாயத்தை உருவாக்கி அபிவிருத்தித்திட்டங்கள் உடனும் பலனளிக்கக்கூடியதாகின்றன.

## கல்வியின் நோக்கம்

பொதுக் கல்வியின் நோக்கம் சமுதாயத்தில் நற்பிரஜைகளை உருவாக்குவதாகும் பரவலாக்கப்பட்ட அடிப்படைக் கல்வி இன்று இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகளில் கட்டாயமாக்கப்பட்டுள் ளது. இந்திய அரசியல் யாப்பில் குழந்தைகளில் 14 வயது வரைக்கு மான அடிப்படைக்கல்வி, அரசவழிக் கோட்பாட்டில் வலியுறுத்தப்படு கிறது. இது சிறு வயதில் நல்லொழுக்கத்தினை வற்புறுத்தி சகலருக் கும் எழுத்தறிவை வளர்க்கிறது. சமுதாய மட்டத்தில் நல்ல பண்பு களையும், விழுமியங்களையும் வளர்க்கிறது. சிறுவயதில் கற்பதும் பழகுவதும் பசுமரத்தாணி போன்று பதிந்துவிடுகிறது. ஆகவே பள்ளிக் கூடங்கள் குழந்தைகளின் சமுகமயமாக்கலை உறுதி செய்கிறது. இது பின்னால் சகல தேசிய நலன்களையும் அபிவிருத்திகளையும் முன்னெ டுக்க உதவுகிறது.

கல்வி வளர்ச்சிக்காக இப்பொழுது பெருந்தொகையான பணத் தை வளர்முகநாடுகள் செலவிடுகின்றன. விஞ்ஞானக் ,கல்வி, தொழில் நுட்பக் கல்வி. கலை கலாச்சாரச் சம்பந்தமான ஆராய்ச்சிகள், பல்கலைக் கழகக் கல்வி என இவை வளர்ந்து செல்கின்றன. வளர்ச்சியடைய மேற்குலக நாடுகளைப் பார்க்கிலும் அதிகமான பல்கலைக்கழகங்களை யும் ஆராய்ச்சி நிலையங்களையும் வளர்முக நாடுகள் ஏற்படுத்தி வரு கின்றன. இவை பலவும் ஆய்வு நிலையங்களாகவும், விஞ்ஞான மற் றும் தொழில்நுட்ப அறிவு மையங்களாகவும் விளங்குகின்றன. இவற் றின் நோக்கம் அறிவு புகட்டுவது மட்டுமன்றி புதிய வளர்ச்சிக்கு வழி காட்டுபவையாகவும், அபிவிருத்தி சிந்தனைகளை நடைமுறைப்படுத்து பவையாகவும் உள்ளன. எல்லாத் துறைகளிலும் நவீனத்துவத்தை வலியுறுத்தி சமூக—பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

கல்வி எவ்வாறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு உறுதுணையாக உள்ளது என்பதனை உணரவேண்டும். முதலில் அபிவிருத்தி சம்பந்த மான சகல செய்திகளையும் அறிவுறுத்தல்களையும் கல்விகற்றவர்க ளால்தான் கிரகித்துக்கொள்ள இயலும். பின்பு இச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுகத்திலுள்ள பலரிடமும்பரப்பப்படுகிறது. இது தொடர்பாடல் என்ற சமூகச் செயற்பாட்டினால் நிகழ்கிறது. தொடர்பாடல்களுக்கு ஆதார மாக தொடர்புசாதனங்கள் விளங்குகின்றன கவர்ச்சிகரமான தொடர் பாடல் இன்றைய தொலைக்காட்சிகள், நாடகங்கள் மூலமாக நடை பெறுவதைக் கூறவேண்டும். மேலும் சிறந்த கல்விக்கொள்கை மூலம் அபிவிருத்தி நோக்குடைய மக்களை உருவாக்குவதோடு, அவர்களே சமூக பொருளாதார வளர்ச்சியின் பங்காளிகளாகவும் மாறுகிறார்கள்.

## கல்விப் பணிகளும் நிர்வாகமும்

கல்வி அமைச்சு அவ்வப்போது கல்விச் சீர்திருத்தத்தினை நோக்கி பல திட்டங்களைத் தீட்டுகிறது. இவற்றை நடைமுறைப்படுத்த அரசின் நிரந்தர நிருவாக அமைப்பு தயாராகிறது. இதற்கென்று கல்வித்துறை நிருவாகம் பல பிரிவுகளாக ஏற்படுத்தப்பட்டு விரைவா கவும் முழுமையாகவும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த முயலு கிறது. இந்த கல்விச் சீர்திருத்தங்கள் ஜனநாயகரீதியில் ஏற்படும் அரசியல் மாற்றங்களினால். மாற்று சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப கொள்கை மாற்றங்கள் செய்யவேண்டியுள்ளது. அதிகாரம் பரவ லாக்கல் சித்தாந்தத்தின்கீழ் பல நிருவாக சீர்திருத்தங்கள் முன் வைக் கப்படுகின்றன. தாய்மொழி மூலம் கல்வி அபிவிருத்திக்கான சீர்திருத்தங்கள் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறு மாறிவரும் தேசிய மற்றும் உலகதேவைகளுக்கு ஏற்ப மாற்றங்கள் இன்றியமையாதவை யாகின்றன. இந்நிலையில் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான நிருவாக அமைப்பு பெரும் சவால்களை எதிர்நோக்குகின்றது.

பொதுவாக எல்லா வளர்முக நாடுகளிலும் கல்வியில் மூன்று நிலைகளைக் குறிப்பிடுவார்கள் :— அடிப்படைக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர் கல்வி என்ற மூன்றினுள் அரசாங்கங்கள் அடிப்படைக் கல்வி யையும் இடைநிலைக்கல்வியையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக் கின்றன. இவை இரண்டும் அரசாங்கத்தின நேரடிக் கட்டுப்பாட்டிற் குள் இயங்குவனவாகும். உயர்கல்வி பொதுவாக அரசாங்க வழி காட்டலுள் அடங்கினாலும், பல்கலைக்கழகங்கள் தொழில் நுட்பக் கல்லூரிகள் என்பன சுதந்திரமாக செயற்படும் தகைமை பெற்றுள்ளன. எனினும் இவற்றின் செயற்பாட்டிலும் நிதி ஒதுக்கீட்டிலும் அரசாங்கம் கட்டுப்பாடுகளை வைத்திருக்கிறது. அதாவது கல்விக்கான திட்டமிடு தல் பலவகையான பொருளியல் ஆய்வுகளையும் உள்ளடக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



அபிவிருத்தியினை அடிப்படையாகக் கொண்டியங்கும் அரச கல்விக் கொள்கை, செயற்பாடு என்பவற்றில் அதிக அக்கறை காட்டுகிறது. உலகில் சோசலிசப் புரட்சி பல இடங்களிலும் வெற்றியடைந்த பின்பு கல்விக் கொள்ளையினை அரச கோட்பாடுகளுக்கு அமைய வைத்திருக்கவும் அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சி ஏற்புடையதாக நிர்ணயிக்கவும் வளர்முக நாடுகள் விரும்புகின்றன. நாட்டின் தேவைக்கேற்ற பட்டதாரிகளையும், தொழில்நுட்பவியலாளரையும் உருவாக்க வேண்டும்; பட்டம் பெற்ற மருத்துவர்கள், மருந்தாளர்கள், பொறியியலாளர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் ஆகியோரை உருவாக்குதல்; அடிநிலை மற்றும் உயர்நிலை அரச நிருவாகிகளை உருவாக்குதல் என்பன திட்டமிட்ட அடிப்படையில் நடைபெறுகிறது. கல்வி ஒரு சுதந்திரமான அறிவைப் பெறும் வழி என்பது ஒரு புறமிருக்க, கல்வி அபிவிருத்திக்கு முக்கியமான ஊடகம் என்ற எண்ணம் மேலோங்கி நிற்கிறது.

இதனை மார்டின் டேனோக் என்பவர் "கல்விக்கான பொருளியல் நோக்கு" என்ற நூலில் விளக்குகிறார். அவர் அரசாங்கத்தின் கல்வியியல் கொள்கையினை பொருளியல் நோக்கில் பார்க்க வேண்டும் எனவற்புறுத்துகிறார். இங்கு பொருளியல் என்பது சமூக—பொருளாதார அபிவிருத்தியினை வற்புறுத்துவதொன்றாகும். இத்தகைய நோக்கு, இன்றைய வளர்முக நாடுகளில் நிலவுகின்ற பொருளாதார தங்கு நிலை, பணப்பற்றாக்குறை, சமூக ஏற்றத்தாழ்வு என்ற குறைபாடுகளை நீக்கி நாட்டினை அபிவிருத்திப் பாதையில் செலுத்துவதற்கு மிகவும் இன்றியமையாததது என்பதை உணரலாம்.

## அபிவிருத்திக்கான ஆளணி உருவாக்கம்

அபிவிருத்திக்கான ஒரு நிருவாக அமைப்பினை உருவாக்கும் போது, அதில் திறமைமிகுந்த நிருவாகிகளையும், உத்தியோகத்தர்களையும் பல நிலைகளிலும் நியமிக்க வேண்டி ஏற்படுகிறது. இது சாதாரணமாக அரசின் நிரந்தர சேவைக்கு நியமிக்கப்படும் ஆளணியினரைக் காட்டிலும் வேறுபட்ட பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அபிவிருத்தி நிருவாகத்திற்கு ஆட்களை தெரிவு செய்யும் போது அவர்களுடைய சமூகப் பின்னணி, அடிப்படைக் கல்வி, விஷேச தேர்ச்சி மற்றும் மனப்பாங்கு என்பன கவனத்திற் கொள்ள வேண்டும். இவர்களுடைய உருவாக்கத்தில் தேசத்தின் கல்விக் கொள்கை ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது.

125455C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திப் பணிகளுக்கு மூன்று வகையான பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். (1) விஞ்ஞான, தொழில் நுட்ப தகைமையுடையோர், (2) முயற்சியாண்மை பெற்று முன்னோடி நிர்வாகஸ்தர்கள்; (3) முகாமைத்துவப் பண்புடையோர். இம் மூன்று வகையான நிருவாகிகளினால் தேசிய பொருளாதார வளர்ச்சி முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இவர்களை உருவாக்குவதில் அல்லது கண்டுபிடிப்பதில் தேசியக்கல்விக் கொள்கை அக்கறைகாட்ட வேண்டும். வளர்ச்சியுற்ற நாடுகளின் அனுபவவாயிலாக இவற்றை எளிதில் அடையலாம். உலகத் தொடர்பாடல் காரணமாக இத்தகைய சாதகமான சூழ்நிலை உருவாகியுள்ளது. அதாவது மேற்குலக நாடுகளில் முன்பு பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வரும் விஞ்ஞான ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்புகளும், இன்று விரைவான செய்திப் பரிமாற்றங்கள் மூலம் எளிதாகவும் விரைவாகவும் சென்றடைகிறது.

பொருளாதார—சமூக அபிவிருத்தியின் உள்ளீடுகளான வாழ்க்கைத் தரம் உயர்வு, வீட்டு வசதி, கல்வி வசதிகள், சுகாதாரம், போக்குவரத்து, தொடர்பாடல் என்பனவற்றின் மேம்பாட்டிற்கு சிறந்த விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வியலாளரின் சேவைகள் மிகவும் வேணடப்படுகின்றன. அதேபோல் ஒரு அமைப்பின் முன்னேற்றத்திற்கும் புதியதுறைகளின் வளர்ச்சிக்கும் முகாமையாளர்களின் வழிகாட்டல் இன்றியமையாததாகிறது. இத்தகைய விஞ்ஞானிகளையும், அறிஞர்களையும், நிருவாக மட்டத்தில் உருவாக்ககூடிய அல்லது நிருவாகத்தில் இணைத்துக் கொள்ளத்தக்க உயர் கல்வி நிலையங்கள் நிறுவப்படவேண்டும். இந்தியாவிலும் சிங்கப்பூரிலும் பொதுநிருவாக ஆராய்ச்சிக் கல்லூரிகள் உள்ளன. இவை புதிய சவால்களை ஏற்றுக்கொள்ளத்தக்க மாணவர்களை உருவாக்குவதிலும், பொதுநிருவாக உத்தியோகஸ்தர்களுக்கு உள்ளகப் பயிற்சி அளிப்பதிலும் ஈடுபட்டுள்ளன.

## தலைமைத்துவ பண்புகள்

பேராசிரியர் லூசியன் பை அவர்கள் “அபிவிருத்தி” என்ற தமது நூலில் முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவப் பண்புகளை வற்புறுத்துகின்றார். பொது நிருவாக அமைப்பில் வெவ்வேறு மட்டத்திலும் இத்தகைய தலைமை நிருவாகிகள் தேவைப்படுகின்றனர். அவர்களுடைய சிந்தனைகளும், செயல்பாடுகளும் முழு நிருவாக அமைப்பினையும் அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டும். தாமும் தமது சகாக்களையும் ஒருமித்து வளர்ச்சிப் பாதையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துச் செல்லக்கூடிய அறிவாற்றலும், அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். இதனை வழிகாட்டும் இயல்பு அல்லது தலைமைத்துவப் பண்பு எனலாம்.

பொது நிருவாகிகள் தாமாக அபிவிருத்தித் திட்டங்களை வரைந்து அவற்றை நடைமுறைப்படுத்துவது ஒருபுறம் இருக்க, முன்பே பாரம்பரியமாக செயல்பட்டு வரும் விவசாயம், கைத்தொழில் என்பவற்றில் காணப்படும் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றிற்கு பரிகாரம் சொல்லும் ஆற்றலும் பெற்றிருக்க வேண்டும். களத்தில் இறங்கி, களநிலைமைகளை அறிந்து அபிவிருத்திக்கான வழிமுறைகளைப் பரிந்துரைக்க வேண்டும். பாரம்பரிய செயல் முறைகளை முற்றாக மாற்றியமைக்க இயலாது ஆகவே படிப்படியாக போதனைகள், வற்புறுத்தல்கள் மூலமாக அவற்றை வளத்திற்கு கொண்டுவரலாம். இதனை இன்றைய தொலைத்தொடர்பு சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி என்பவற்றின் மூலம் செய்யலாம். எனவே ஒரு அபிவிருத்தி நிருவாகி எதிலும் எப்பொழுதும் மூகாமைத்துவ இயல்புகளைப் பெற்றிருத்தல் அவசியமாகும். பொதுநிருவாகம் என்ற முழு சமுதாயத்தையும் தன்னுடன் அழைத்துச் செல்லும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# விவசாய அபிவிருத்தி

அபிவிருத்தி என்பது குறிப்பிட்ட சமூக—அரசியல்—பொருளாதார இலக்குகளை அடைவதனைக் குறிக்கும். அது தற்போதுள்ள சமூக – பொருளாதார நிலைமைகளைக் காட்டிலும் ஒரு முன்னேற்றகரமான வளர்ச்சியைச் சுட்டி நிற்கும். வளர்முக நாடுகள் பலவற்றிற்கும் ஒரு பொதுவான தன்மை வறுமையாகும். இது பன்னெடுங் காலம் அரசியல் சுதந்தரமற்ற அநிந்யர் பிடியில் சிக்கித் தவித்த பலகோடி மக்கள் வறுமை ஒன்றையே பரிசாகப் பெற்றனர். வறுமை வேறுபல துன்பங்களுக்கும், நோய்களுக்கும் காரணமாகி, சமுதாய ஏற்றத்தாழ்வினை ஏற்படுத்தி. மீண்டும் வறுமைப் பள்ளத்தாக்கில் மக்களைத் தள்ளிவிடுகிறது. இத்தகைய பின்தங்கிய நாடுகளில் விவசாயம் ஒன்றே பெருந்தொகையான மக்களுக்கு ஜீவனோபாயமாக விளங்குகிறது. இந்நாடுகளில் எழுபது சதத்திற்கும் அதிகமானோர் கிராமங்களிலே வாழ்கிறார்கள். அதனால் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு எத்தகைய உந்துதலும் இன்றி சராசரி மக்கள் வறுமையில் வாழ்கின்றனர்.

தேசியப் பொருளாதாரத்தில் விவசாய உற்பத்தி பெரும் பங்கினை வகிக்கின்றது. மேலும், விவசாயத்தின் மூலமாக மக்கள் அனைவரும் உண்ண உணவினைப் பெறுகிறார்கள். அதன் அபிவிருத்தியினால் அதிக அளவிலும். திறன் மிகுந்ததுமான உணவைப் பெறுகிறார்கள். தேசிய அபிவிருத்தி காரணமாக விவசாய உற்பத்தி பல்கிப் பெருகி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யும் வளர்ச்சி அடைகிறது. இது உலக உணவுத் தேவையை பூர்த்தி செய்வதோடு, நிலையான உலக சமாதானத்தை ஏற்படுத்துகிறது. மேலும், விவசாய வளர்ச்சி காரணமாக தேசியபொருளாதாரத்தின் ஏனைய அங்கங்களான, கைத்தொழில், தொடர்பு சாதனங்கள் எனபவற்றில் முதலீடு செய்ப முடிகிறது. விவசாயக் குடும்பங்களின் வளர்ச்சி கிராம அபிவிருத்திக்கு அடித்தளமிடுகிறது. இது சாதாரண மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் மேலும் சமுதாயம் வளரவும் உதவுகிறது.

அண்மைக்காலங்களில் உலக சனத்தொகை வளர்ச்சி, உலக உணவு உற்பத்தியில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகிறது. அதாவது எங்கும் எப்பொழுதும் உணவு பற்றாக்குறை தோன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை இருந்துவருகிறது. இதனால் இப்பொழுதே வறுமை தாண்டவ மாடும். பின்தங்கிய ஆபிரிக்க நாடுகளில் உணவுப் பஞ்சமும், பட்டினிச் சாவுகளும் அதிகரித்துள்ளன. இது உணவுப் பற்றாக்குறை என்பதால் மட்டுமன்றி அரசியல் வலுவின்மையும் பெருமளவு தங்குநிலை பொருளாதாரமும் ஆகும். ஆகவே உணவு உற்பத்தி மிகவும் அடிப் படைப் பொருளாதார அபிவிருத்தியாகும். அப்பொழுது வளர்முக நாடுகளில் தேவையான அடிப்படை உணவும். சுகாதாரத்திற்கு இன்றி யமையாத சத்துணவும் வழங்க இயலும்.

ஐ. நா. வின் உணவு விவசாய அமைப்பு 1978ஆம் ஆண் டறிக்கையில் இவ்வாறு கூறுகிறது. உலகின் 40 சத வீதமான பெண்கள் இரத்த சோகையினால் வருந்துகிறார்கள். இது சத்துணவுக் குறைபாட்டாலும் சுகாதார சீர்கேட்டாலும் ஏற்படுகிறது. வருடாந் தம் ஒரு இலட்சம் குழந்தைகள் இதனால் கண்பார்வை இழக்கிறார் கள். அநேகமாக ஒவ்வொரு வளர்முக நாடும் உணவுப் பற்றாக் குறையையும் அதனால் நோயையும் எதிர்கொள்ளுகிறது. ஆனால் ஐ. நா. அறிக்கை பின்வரும் நாடுகளைக் குறிப்பிட்டு எழுதுகிறது. இத்தியோப்பியா, இந்தியா, நைஜீரியா, சுடான். சைரே என்பன இப்பொழுது போர்கால சூழ்நிலையில் சோமாலியா, பிரேசில், பங் களாதேஸ் நைஜீரியா என்பனவற்றில் பட்டினிச் சாவுகள் அதிகரித்துள் ளன. அதனால் விவசாயத்தில் பெருமளவில் ஈடுபட்டுள்ள நாடுகள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யவும், பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், உதவவும் வழி உற்பத்தியைப் பெருக்குவதுதான் என ஐ. நா. வற்புறுத்துகிறது.

## நவீனத்துவ மயமாக்கல்

விவசாயத்துறைனய விஞ்ஞான – தொழில்நுட்ப நடவடிக்கை களால் நவீனத்துவப்படுத்தல் முதலாவது இன்றியமையாக் கடமை யாகும். இன்று யப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் நவீனமய மாக்கலினால் பெரும் வெற்றி கண்டுள்ளனர். சிலநிலப்பரப்புகளைக் கொண்ட இவை போன்ற நாடுகள் விவசாயத்துறையில் பெரும் சாதனைகளை நிகழ்த்தி உள்ளனர். ஆகவே அளவிதமான நிலங்க ளைக் கொண்ட பாரம்பரிய விவசாய நாடுகளான இந்தியா, பாக்கிஸ் தான், பிரேசில் போன்றவை அபரிவிதமான உற்பத்தியினை ஏற்டுடுத லாம். இந்தியாவில் கடந்த ஓரிரு தசாப்தங்களில் "பசுமை" புரட்சி மூலம் கோதுமை, நெல் உற்பத்திகள் அதிகரித்தன, அதேபோன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் உற்பத்தியும், கால்நடை அபிவிருத்தியும் ஏற்பட்டன. இந்தியா சிறுதானிய உற்பத்தியிலும். கால்நடை அபிவிருத்தியும் ஏற்பட்டன. இந்தியா சிறுதானிய உற்பத்தியிலும், பருப்பு, பழவகைகளிலும் தன்நிறைவு பெற்றுள்ளது.

இன்று ஏற்பட்டுள்ள நவீனத்துவத்திற்கு அறிவியல் — தொழில் நுட்ப முன்னேற்றம் மட்டும் பொறுப்பல்ல, தொலைத் தொடர்புகள், பல்தேசிய மயமாக்கல் என்பனவும் குறிப்பிடக்கூடிய காரணிகளாகும். பணப்புழக்கம் மற்றும் வெளியுலகத்தொடர்புகள் மூலம் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களை விவசாயிகள் தெரிந்து கொள்ளுகிறார்கள். சர்வதேச மயமாக்கல் தனி மனித சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் மாற்றியமைத்து விட்டன. பிற பிரதேசங்களிலும், வெளிநாடுகளிலும் நிகழும் அறிவியல்புரட்சி அவ்வப்போது வானொலி, தொலைக்காட்சிகள் செய்திகள் மூலம் தெரிவிக்கப்படுகின்றன. சர்வதேச கருத்தரங்கும் பெருமளவுக்கு உதவுகின்றன. ஐ. நா. உலக விவசாய ஒன்றியம். சர்வதேச நிதி நிறுவனங்கள் என்பன பெருமளவுக்கு இந்த சர்வதேசிய மயமாக்கலில் ஈடுபடுகின்றன. இவற்றின் தாக்கம் தேயிலை, றப்பர் சமையல் எண்ணை சீனி போன்ற உற்பத்திப் பொருட்களில் பெருமளவு உணரப்படு ன்றன. இன்று சமையல் எண்ணை உற்பத்தியில் மலேசியா ஐக்கிய அமெரிக்காவுடன் போட்டியிடுகிறது. அதே போல் தேயிலை ஏற்றுமதியில் இந்தியா, இலங்கை, மலேசியா, கெனியா போன்ற வளர்முக நாடுகள் முன்னணியில் உள்ளன.

## விவசாய உற்பத்திப் பெருக்கம்

நவீன அறிவியல் வளர்ச்சி விவசாயத்துறையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திவருவது கண்கூடு. இந்த உற்பத்திப் பெருக்கத்திற்காக நிர்வாகத்துறை எந்த வகையில் செயல்படுகிறது என்பதை, பேராசிரியர், ஜார்ஜ், கான்ட் அவர்கள் பட்டியலிட்டுக் கூறுகிறார்.

(1) விவசாயத்துறையில் அறிவியல்—தொழில்நுட்ப ஆராச்சிகளை ஊக்குவிப்பதோடு , அவற்றின் செயற்திறனை விவசாயிகள் விளங்கிக் கொள்ளும் விதத்தில் பிரசார அடிப்படையில் விளங்குதல். (2) புதிய விவசாயக் கருவிகளைப் பயன்படுத்தும் முறைகள், உரம் போன்ற உள்ளீடுகளின் பயன்கள். புதிய ரக தானிய விதைகளைப் பயன்படுத்தல் விளைபொருட்களை சந்தைப்படுத்தல் என்பன போன்ற தகவல் பரிமாற்றத்திற்கு ஒழுங்கு செய்வது அரச நிர்வாகிகளின் பொறுப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய, மற்றும் பெருந்தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் சந்தேகங்களை நீக்கி, அபிவிருத்திக்கான கருத்துக்களைப் பரிந்துரைப்பது அபிவிருத்தி நிருவாகிகளாவர்.

(3) விவசாயத்திற்குத் தேவையான மூலப்பொருள்கள் உபகரணங்கள் ஆகியவற்றின் தடையற்ற விநியோகத்திற்கு உதவுதல் (4) கட்டுப்பாட்டு விலைகள் மூலம் விவசாயிக்கு நிரந்தரமான வருவாயையும் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபத் தொடர்புகளையும் ஏற்படுத்தல். (5) கிடைக்கக்கூடிய தொடர்புசாதனங்கள் மூலம் சகல விதமான தகவல்களையும் பரிமாறிக்கொள்ளுதல். இதில் சர்வதேச சந்தை நிலைமை மட்டுமல்லாது, விவசாயத்திற்கு அடிப்படையான காலநிலை, மழை போன்ற தகவல்களும் பரிமாறப்படவேண்டும்; (6) இறுதியாக, தேசிய பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிக்கும் விவசாயம் என்பது மட்டுமல்ல, சனத்தொகையிலும் பெரும்பான்மையினராக உள்ளவர்கள் இந்த விவசாயிகளேயாவர். ஆகவே அவர்களுடைய அடிப்படைக் கல்வித்தரம் உயரவேண்டும். அதற்கு நவீன கல்விக்கொள்கை மூலம் அபிவிருத்தி நிருவாகிகள் செயற்படலாம்.

## விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள்

விவசாய உற்பத்திப் பெருக்கத்தை நோக்கமாகக் கொண்டு பல விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் பஞ்சாப் பல்கலைக்கழகம், பூனா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் விவசாய ஆராய்ச்சி நிறுவனம் என்பன பொதுவாக விவசாய அபிவிருத்திக்கு உறுதுணையான அறிவியல் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளன, இலங்கையில் தேயிலை ஆராய்ச்சி நிலையம், றப்பர் ஆராய்ச்சி நிலையம் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை உருவாக்கியுள்ளன. விவசாய அபிவிருத்திக்கென்று மலேசியா தனது மத்திய அதிகாரத்தின் கீழ் "மலேசிய விவசாய அபிவிருத்தி ஆய்வு நிறுவனம்" ஒன்றினை உருவாக்கி எல்லா மாநில ஆய்வாளர்களுக்கும் பயிற்சியும் அறிவியல் கல்வியையும் புகட்டுகிறது. பிலிப்பைபயின் நாட்டிலுள்ள சர்வதேச நெல் ஆராய்ச்சி மையம் சிறந்த பணிகளைச் செய்து வருகிறது. வளர்ந்து வரும் உணவுத் தேவைகளை நிறைவு செய்வதற்காக சர்வதேச நிறுவனங்களான ஐ. நா., யு. என். டி பி. உணவு விவசாய நிறுவனம், ஐ. எம். எவ். ஆகிய அபிவிருத்தி வங்கி என்பன விவசாய உற்பத்திக்கும், அபிவிருத்திக்குமாக பெருந்தொகை பணத்தை வழங்கி வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# அபிவிருத்திக்கான பொது உற்பத்தி நிறுவனங்கள்

முதலாவது உலகமகாயுத்தத்தின் பின்பு, அதாவது முக்கியமாக சோவியத் புரட்சிக்குப் பின்பு பொது உற்பத்தி நிறுவனங்களின் தோற்றமும் வளர்ச்சியும் உணரப்பட்டன. அரசுகள் பெருமளவு பணத்தை முதலீடு செய்து உற்பத்திகளை பெருக்க எத்தனித்தன. முதலில் மக்களின் நுகர்வுப் பொருட்களின் உற்பத்தியில் முதலீடு செய்தார்கள். பின்பு அடிப்படை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டார்கள். இவற்றை தனியார் துறையின் விருப்பு வெறுப்புக்களில் தங்கியிருக்காது, அரசு நிறுவனங்களை ஏற்படுத்தி, அவற்றிற்கு பெருமளவு முதலீடு செய்து உற்பத்திகளைப் பெருக்கினார்கள். இவற்றின் அமைப்பிற்கும், செயற்பாட்டிற்குமாக பல சட்டங்களை நிறுவினார்கள். இத்தகைய பொது உற்பத்தி நிறுவனங்கள் இந்தியா, எகிப்து, தன்சானியா போன்ற நாடுகளில் 1950ம் ஆண்டிற்குப் பின் பல்கிப் பெருகின.

பாரம்பரியமாக விளங்கிய தனியார்துறை உற்பத்தி நிறுவனங்களுக்கும் இந்த நூற்றாண்டில் உருவாகிய பொதுத்துறை உற்பத்தி நிறுவனங்களுக்குமிடையில் பெரும் வேறுபாடுகள் உள்ளன. பொதுத் துறை உற்பத்தி நிறுவனங்கள் மூன்று தனிப்பெரும் இயல்புகளைக் கொண்டுள்ளன: (1) அவற்றின் ஸ்தாபனம்; அதாவது பொதுத் துறை உற்பத்தி நிறுவனங்கள் பாராளுமன்றத்தினாலோ, அல்லது பொது நிருவாக அமைப்பொன்றினாலோ ஸ்தாபிக்கப்பட்டிருத்தல்: (2) அதன் உத்தியோகத்தர்கள் அனைவரும் பாராளுமன்றத்திற்கோ அல்லது பொது ஸ்தாபனத்திற்கோ பொறுப்பாக இருப்பது மட்டுமன்றி, அவற்றால் வழி நடத்தப்பட்டும் வேதனம் வழங்கப்பட்டும் வருவர். (3) பொது உற்பத்தி நிறுவனங்களின் வருடாந்த வருமானம், அல்லது செலவு அல்லது செயற்பாட்டு அறிக்கைகள் பொது நிருவாக அமைப்புக்கள் மூலம் பாராளுமன்றிற்கு சமர்ப்பிக்கப்படும். இவ்வாறு சகல வழிகளிலும் பொதுமைப் பண்பு பேணப்படும்.

அண்மைக்காலங்களில் பொருளாதார நடவடிக்கைகளில் பெரும் பகுதி இவ்வாறு பொது ஸ்தாபனங்களுக்கும், அல்லது அவற்றின் செயல் திறமைக்காக அமைக்கப்பெற்ற பொது நிறுவனங்களுக்கும் பகிர்ந்தளிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



கப்பட்டமையினைக் காணலாம். இவ்வாறு உற்பத்தித் துறையில் மட்டுமன்றி, பங்கீடு, சந்தைப்படுத்தல், போக்குவரத்து போன்ற துறைகளிலும் பொதுமைத்தன்மை விரவி நிற்பதைக் காணலாம். உதாரணமாக இந்தியா, இலங்கை, ஆகிய நாடுகளில் அத்தியாவசியப் பண்டங்களின் விநியோகத்தில் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் ஈடுபட்டிருப்பதைக் கூறவேண்டும். மகாராஷ்ர மாநிலத்தில் சர்க்கரை உற்பத்தி ஆலைகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இயங்குகின்றன. குஜராத மாநிலத்தில் பால் பண்ணைகள் அவ்வாறே கூட்டுறவு முறையில் செயல்பட்டு பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன.

எகிப்தில் விவசாயப் பொருட்களின் உற்பத்திக்கும் விநியோகத்திற்கும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. விவசாயத்திற்கு வேண்டிய உரவகைகள், விதைகள் ஆகியன கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் பெறப்பட்டு விளைபொருட்கள் பின்பு அவற்றின் மூலம் விற்பனைக்கு விடப்படுகின்றன. டன்சானியாவிலும் இது போன்று விவசாய உற்பத்திக்கும், கைத்தொழில் வளர்ச்சிக்குமாக வெவ்வேறு கூட்டுறவுமுறைகளை அறிமுகம் செய்து பெரும் பொருளாதாரப் புரட்சியினை அதிபர் நைரேரே ஏற்படுத்தினார்.

பொதுமைத்தன்மைக்கு அடுத்தபடியாக, சட்டத்தின் மேலாண்மை இவற்றில் வலியுறுத்தப்படுகிறது. அதாவது பொது உற்பத்தி அல்லது விநியோக அமைப்புக்கள் சட்டப்படி ஏற்படுத்தப்பட்டு செயற்படுகின்றன. ஆகவே அத்தகைய நிறுவனங்களில் உத்தியோகத்தர்கள் முறைப்படி நியமிக்கப்பெறுவர்; ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும். இவற்றில் பொது நலன்களும் தேவைகளுமே வலியுறுத்தப்படும். லாபம் ஈட்டுதல் அடிப்படை நோக்கமாக இருக்காது. ஆனால் பொது உற்பத்தி நிறுவனங்கள் தொடர்ந்து நட்டத்தில் இயங்குவதையும் அனுமதிக்க முடியாது. பெருந்தெருக்கள் திணைக்களம், புகையிரதம் சேவைகள், மின்சாரம் என்பன அபிவிருத்திக்கான பொது நிறுவனங்களாகக் கொள்ளப்படுகின்றன.

## தனியான நிறுவனங்களுக்கான காரணங்கள்

பொது நிருவாக அமைப்பு நாடளாவிய ரீதியில் பெருந்தொகையான சிவில் உத்தியோகத்தர்களையும் பணியாளர்களையும் கொண்டியங்குகிறது. அவர்கள் அரசாங்க சட்டப்படி சிவில் உத்தியோகத்தர்களையும். நிரந்தர சேவையாளராகவும் உள்ளனர். அவர்களால் பெரும்பான்மையான நி வாகத்துறைகளும் இலாகாக்களும் நிர்வகிக்கப்படும்போது வேறு தனியான உற்பததி நிறுவனங்கள் ஏற்படுத்தப்படவேண்டிய அவசியம் என்ன? இது பலராலும் எழுப்பப்படும் கேள்வியாதலால் அதற்கான விடையை அறிதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த கால கட்டத்தில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அபிவிருத்திக்கு இத்தகைய தனியான நிறுவனங்கள் இன்றியமையாதவை ஆகின்றன. இந்நிறுவனங்களில் புத்துணர்வு பெற்ற அதிகாரிகளும் அலுவலர்களும் அபிவிருத்திப் பணியில் ஈடுபட வேண்டும். சாதாரண நிருவாக சூழ்நிலையில் பெறமுடியாத முகாமைத்துவப் பண்புகளைக் கொண்ட புதிய தலைவர்கள் கடமையில் அமரவேண்டும். இதுவே தனியான உற்பத்தி நிறுவனங்களை ஏற்படுத்தி நிர்வகிக்க வேண்டிய அவசியமாகும். மேலும், பாரம்பரிய நிருவாகக் கடமைகளில் ஈடுபட்டுள்ள பொது நிருவாகப் பணியாளர்கள் புதிய சவால்களை ஏற்கும் மனநிலையில் இல்லை. உற்பத்தி நிறுவனங்களுக்கான முதலீடுகளைப் பெறுவதும் இலகுவல்ல. மாறிவரும் சர்வதேச பொருளாதார தாக்கங்களினால் சர்வதேச நாணய நிதியங்கள் புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய நிறுவனங்களுக்கும் பணிகளுக்குமே பண உதவி செய்ய முன்வருகின்றன ஆகவே பகிரா நங்கல் அணைக்கட்டு, தாமோதர் பள்ளத்தாக்கு ஆணைக்குழு போன்றவை இந்தியாவில் உருவாககப்பட்டு வெளிநாட்டு உதவிகள் மூலம் பயன் பெற்றுள்ளன. இலங்கையில் மகாவலித்திட்டம் இத்தகைய பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிறுவனங்களில் ஒன்றாகும்.

இத்தகைய உற்பத்தி நிறுவனங்கள் அரசாங்கத்தின் அன்றாட கட்டுப்பாட்டிலிருந்து சிறிது விலகி சுதந்திரமாக செயல்படுகின்றன. இவற்றில் வினைத்திறன் மிக்க முகாமையாளர்களும் தனியான சிறப்புத் தகுதி பெற்ற அலுவலர்களும் அபிவிருத்தி சேவையில் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய நிறுவனங்களில் சுதந்திரத்தோடு கூடிய வினைத்திறன் எதிர்பார்க்கப்படுகிறது. அரசியல் தலையீடுகள் அற்ற சூழ்நிலை நிலவுகிறது.

## பொதுத்துறையின் பிரமாண்டமான வளர்ச்சி

திரு வி. வி. ராமநாதம் தமது அரச 'தொழில் நிறுவனங்கள்' என்ற நூலில் இத்தகைய பொதுத்துறை உற்பத்தி அமைப்புக்களின் தன்மை, விரிவாக்கம் மேலாதிக்கம் என்பன பற்றி விரிவாக எழுதியுள்ளார். வளர்ந்து வரும் சமூக பொருளாதார அபிவிருத்திகள் காரணமாக அரச உற்பத்தி நிறுவனங்கள் பெருமளவு பல்கிப்பெருகியுள்ளன. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தினை அறிமுகம் செய்த ஜவகர்லால் நேரு தமது நாடு பெற்ற அரசியல் சுதந்திரத்தினை பயனுள்ளதாக செய்ய வேண்டுமெனில், பொருளாதார சுதத்திரம் மிகவும் அடிப்படையானது என்றார். அந்தக் கால கட்டத்தில் இந்தியாவின் உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்கள் தனியார் துறையில் காணப்பட்டன. ஆனால் அவை லாபம் ஈட்டமுடியாத துறைகளில் ஈடுபட விரும்பவில்லை. மேலும் பெருந்தொகையான பணத்தை முதலீடு செய்யவும் விரும்பவில்லை. ஆகவே இதற்கு ஒரே மாற்றுவழி அரசாங்கம் பொறுப்பேற்று பொது உற்பத்தி நிறுவனங்களை ஏற்படுத்தி மக்களுடைய அன்றாட நுகர் பொருட்கள் மட்டுமன்றி, கைத்தொழில் அபிவிருத்திக்கு அடிப்படையான, இரும்பு, நிலக்கரி, ஆகியவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டது. மின்சாரம், நெடுஞ்சாலைகள், கடல்வழி வான்வழிப் போக்குவரத்து என்பவற்றில் பெரும் முதலீடுகளைச் செய்து பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டார். ஆகவே அரச நிறுவனங்கள், பொது நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புக்கள் யாவும் பிரமாண்டமான வளர்ச்சியைக் கண்டன. 1950 — 1970 வரை இந்த நிலை நீடித்தது.

சில நாடுகள், தீவிரமான சோசலிச கோட்பாட்டினைப் பின்பற்ற விரும்பி தமது பொருளாதாரத்தின் பெரும்பகுதியினை அரச மயமாக்க முனைந்தன. இதற்கு மேலும் காரணிகளாக தனியார் துறையினரின் முதலீடுகளில் ஆர்வமின்மையும் வெளிநாட்டு உதவிகள் கிட்டாமையும் குறிப்பிடப்பட வேண்டும். அதனால் அரசாங்கங்களே முன்வந்து பொது உற்பத்தி மற்றும் விநியோக அமைப்புகளை ஏற்படுத்தலாயின.

தன்சானியா அரசு முதலில் நிறுவிய "தேசிய அபிவிருத்திக் கோப்பரேசன்", தன்னகத்தே ஐம்பதிற்கும் மேற்பட்ட கம்பனிகளைக் கொண்டிருந்தது. இவற்றிற்கு உதவியாக நாடு முழுவதிலும் தேசிய வியாபார மையங்கள் நிறுவப்பட்டன. இவ்வாறு அரசுக்கு முதலிடம் கொடுத்த நைரேரேயின் கொள்கை உலகெங்கும் பிரசித்தமாகியது. மலேசியா தனது புதிய பொருளாதாரக் கொள்கை மூலம் நிதி நிறுவனங்களையும் உற்பத்தி அமைப்புக்களையும் ஏற்படுத்தி அரசியல், பொருளாதார, சமூக அபிவிருத்திக்கு வழிசெய்தது. சாம்பியாவின் கைத்தொழில் வளர்ச்சிக்கு அந்த அரசு நிறுவிய 'தேசிய கைத்தொழில் கார்பரேஷன்' அடித்தளமிட்டது. இதேபோல எகிப்து, இலங்கை ஆகிய நாடுகள் பல பொது நிறுவனங்களை ஏற்படுத்தியதோடு வெளிநாட்டு கம்பனிகளையும், வங்கிகளையும் தேசிய மயமயமாக்கியது. இவ்வாறு தேசிய வருமானத்தின் ஒருபகுதி வெளிநாடுகளுக்கு செல்வதைத் தடுக்கும் உத்திகளும் கையாளப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் தனியார் மயமாக்கல்

அரச நிறுவனங்களின் அபரிமிதமான வளர்ச்சி பல எதிர் விளைவுகளை உண்டுபண்ணியது. இந்த அரச உற்பத்தி, விநியோக அமைப்புகள் மற்றும் பொது நிறுவனங்கள் சுதந்திரமான சட்ட சூழ்நிலையில் இயங்கத் தொடங்கியதும், ஆங்காங்கே பலவிதமான ஊழல்களும், பணவிரயங்களும் தலைகாட்டத் தொடங்கின. மேலும் மேற்படி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே செல்ல அவற்றில் வேலையாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையும் பன்மடங்காகியது. இது பணிக்குழு வர்த்தகத்தாரிடம் வேண்டத்தகாத சில விளைவுகளை ஏற்படுத்தியது. அரசுக்குள் இன்னொரு அரசு என்ற வகையில் அதிகாரிகள் செயல்படத் தொடங்கினர். இந்தியா ஜாம்பியா போன்ற பல வளர்முக நாடுகளில் ஊழல் பிரச்சனை விசுவரூபம் எடுத்து பல பொது உற்பத்தி நிறுவனங்களை நட்டத்திற்குத் தள்ளியது. இதனால் தேசிய வருமானம் வீழ்ச்சியடையவும் அபிவிருத்தித் திட்டங்கள் தடம் மாறிப் போகவும் காரணங்கள் கூறப்பட்டன. இக்காலகட்டத்தில் சோவியத் பொருளாதாரம் சீர்குலைந்து உலக நாடுகள் மீண்டும் தனியார் துறைக்கும் சர்வதேச நிறுவனங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தன. இந்த நூற்றாண்டின் கடைசி தசாப்தத்தில் அதிகமாகப் பேசப்படுவது உலக மயமாக்கல் அல்லது சர்வதேச மயமாக்கல் என்பதாகும். இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியும், சர்வதேச தொடர்புகளும், உலக நாணய நிதி நிறுவனங்களும் இதனையே வற்புறுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

6

# அபிவிருத்தியில் அதிகாரப் பகிர்வு

ஒரு நாட்டின் இயல்பான வளர்ச்சியினை நோக்குவோமானால் அங்கு அதி உச்சவளர்ச்சி கண்டுள்ள நகரங்களும், மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள கிராமங்கள், பட்டினங்கள் என்பனவும் அடுத்தடுத்து இருப்பதனைக் காணலாம். நாகரீகம் முன்பு ஒரு காலத்தில் ஆற்றங் கரைகளிலும் சமுத்திர துறைமுகங்களிலும் ஏற்பட்டதாக கூறுவார் கள். இந்தியாவின் முக்கிய நகரங்களான பம்பாய், சென்னை, கல்கத்தா, தில்லி என்பன இவ்வாறே அமைந்து உள்ளதோடு, இவையே நாட்டின் வளர்ச்சி மையங்களாகவும் திகழ்கின்றன. உலகின் ஏனைய நகரங்களான ரோம், பரீஸ். லண்டன் என்பனவும் நாகரீகத்தின் இருப்பிடங்களாக அமைந்தன. பெரும்பாலும் நகரங்களைச் சுற்றியே பொருளாதார சமூக வளர்ச்சி ஏற்பட்டுள்ளன. உதாரணமாக கிரேக்க நாகரீகமும் அரசியல் தோற்றுவாயும் கிரேக்க நகரப் பேரரசுகளைச் சார்ந்தே அமைந்தன.

12545 SC

ஆனால் இன்றைய சமுதாய வளர்ச்சியின் ஆய்வுகளில் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. நகரங்களில் வாழ்ப வர்களும் ஒரே தன்மைத்தான பொருளாதார, சமூக, மாறும் கல்வி வசதிகள் பெற்றிருக்க வேண்டுமென வற்புறுத்துகிறார்கள். சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட வேண்டுமென வாதிடு கிறார்கள். சகல பொருளியல் வாய்ப்புகளிலும் சம சந்தர்ப்பமும், அரசியலில் சமத்துவமும் ஏற்பட சட்டம் இயற்றுகிறார்கள். அரசியல் அதிகாரங்கள் ஒரிடத்தில் குவிந்துவிடாதிருக்க, அதிகாரப்பரவலாக்கல் கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. சனநாயகத்தின் அடிப்படை யில் அரசியல் யாப்புக்கள் எங்கணும் சீர்திருத்தப்படுகின்றன அரசியல் சுதந்திரம் பெற்ற பல நாடுகளில் பொருளாதார சுதந்திரத்திற்காக சமூகங்கள் போராடுவதை உலகின் எல்லாப் பாகங்களிலும் இன்று காணலாம்.

## பிராந்திய அபிவிருத்தி

ஒரு தேசிய அரசு பல பிராந்தியங்களை தன்னகத்தே கொண் டுள்ளது. அதாவது, ஒருநாடு பல பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட் டுள்ளது. இது பொருளாதார வளர்ச்சிக்கான பல்வேறு அலகுகளாகவோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சீரான நிருவாக நடைமுறைகளுக்கான பிரிவுகளாகவோ, அல்லது இன—மத அடிப்படையிலான புவியியல் கூறுகளாகவோ அமையலாம். இவ்வாறு அமையும் எந்த நிலையிலும் அதிகாரப் பரவலாக்கல் தேசிய அபிவிருத்திக்கு இன்றியமையாத அடிப்படைக் கோட்பாடு ஆகும். இதன் மூலம் பலவித தன்மைகள் அடையப் பெறுகின்றன: ஒன்று. அரச அதிகாரத்தினைப் பல்வேறு கூறுகளுடன் பகிர்ந்து கொள்ளும்போது சனநாயகம் அர்த்தமுள்ள அரசாகிறது; இரண்டு பொருளாதாரசமூக அபிவிருத்திக்கு இலகுவாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த முடிகிறது: மூன்று சட்டரீதியான சமத்துவமும் அபிவிருத்தியின் பலாபலன்களும் சமமாக பகிர்ந்தளிக்கவும் உதவுகிறது. அதிகாரம் பரவலாக்கல் மூலம் சகல இனமக்களுக்கும் சமசந்தர்ப்பம் ஏற்படக்கூடியதும், சனநாயகக் கட்டமைப்பில் பங்குகொள்ளக் கூடியது மான வாய்ப்புக்களும் அதிகரிக்கின்றன.

ஒரு பிராந்தியமானது, ஒரு நாட்டின் ஒரு பகுதி, அங்கு மக்கள் வாழ்கிறார்கள்: அதற்கு நிர்ணயிக்கப்பட்ட எல்லைகள் உள்ளன: இயற்கை வளங்கள் உள்ளன. பிராந்தியங்கள் மக்கள் வாழும் இடங்களாதலால், அங்கு அபிவிருத்திக்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. அவை பல்வேறு பிராந்தியங்களோடு சேர்ந்து ஒருங்கிணைக்கப்பெற்று தேசிய திட்டமாக பரிணமிக்கின்றன. இவற்றின் விரிவாக்கமும் நிலைப்பாடும் நாட்டிலுள்ள அரசியல் சட்டங்களால் தீர்மானிக்கப்படுகின்றன. உண்மையான அரசியல் அதிகாரம் பரவலாக்கல் மூலம் பிராந்திய திட்டங்களை வலுவுள்ளவையாகவும் தேசிய கட்டமைப்புக்கு உதவியாகவும் உருவாக்க இயலும்.

உலகப் பொருளாதார கட்டமைப்பில் எவ்வாறு பிராந்திய பொருளாதாரங்கள் உள்ளனவோ, அவ்வாறே தேசிய பொருளாதாரத்திலும் காணப்படுகின்றன. இன்று தென்னாசியா, தென்கிழக்காசியா, ஐரோப்பிய பொருளாதாரம் எனப் பல கூறுகள் பேசப்படுகின்றன. அதே போன்று இலங்கையில் வட கிழக்குப் பிராந்திய, தென் பிராந்தியம் எனப்பல கூறுகள் காணப்படுகின்றன. ஆகவே தேசியப் பொருளாதார—சமூக அபிவிருத்தியில் பிராந்தியங்களைச் சேர்த்துக் கொள்வதால் அரசியல் அபிவிருத்தியும் ஒற்றுமையும் ஏற்படுகிறது. நிருவாக, புவியியல் மற்றும் சுற்றுச் சூழல் அபிவிருத்தி ஏற்படுகிறது. மேலும் முழுமையான திட்டமிடல் பணிகளுக்கு இவ்வாறு ஒருங்கிணைக்கப்பெற்ற பிராந்திய—தேசிய அபிவிருத்திக் குறிக்கோள்கள் முன்வைக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நதிப்பள்ளத்தாக்கு, இயற்கைவளம்.

பிராந்திய அபிவிருத்தித் திட்டமிடல் பணிகளில், அண்மைக் காலமாக நதிப்பள்ளத்தாக்குகள் திட்டங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. நதிகள் பலவும் நாடுகளின் எல்லைகளைத்தாண்டியும், மாநிலங்களின் எல்லைகளைத்தாண்டியும் பாய்கின்றன. அவற்றைத் தடுத்து அணைக்கட்டுகள் அமைப்பதன் மூலம் பரந்தநிலப்பரப்புகள் வெவ்வேறு விவசாய உற்பத்திகளை எட்டுகின்றன. மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மீன் வளர்ப்பு மற்றும் கால்நடைப் பண்ணைகள் ஏற்படுத்தப்படுகின்றன. இவ்வாறு பலவகையான அபிவிருத்திகளை உள்ளடக்கிய நதிப்பள்ளத்தாக்கு திட்டங்கள் உலகின் பல பாகங்களிலும் தோன்றியுள்ளன. அத்தகைய முதலாவது பிரசித்தமான திட்டம் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள "ரெனலிவாலி" அபிவிருத்தித்திட்டமாகும். இந்தியாவில் தாமோதர் நதிப்பள்ளத்தாக்கு திட்டம், பக்ராநங்கல் திட்டம், மிகவும் பிரசித்தமானவையாகும். அந்நாட்டின் பசுமைப் புரட்சிக்கும் பெருமளவு நெல் கோதுமை தானிய உற்பத்திக்கும் இப்பள்ளத்தாக்கு அதிகாரசபைகள் உதவின.

தென்கிழக்கு ஆசியாவில் நெல் அபிவிருத்தியில் மேகோங் ஆற்றுத் திட்டம் பெரும்பங்குவகித்ததோடு பலநாடுகளை உள்ளடக்கிய தென் கிழக்காசிய பிராந்திய அமைப்பிற்கும் அது அத்திவாரமிட்டது எனலாம். அதே போல் சூயஸ் கால்வாய்த் திட்டம் மத்தியகிழக்கு நாடுகளின் அபிவிருத்திக்கு உதவியது. இலங்கையில் மகாவலி அபிவிருத்தி சபையும் அதன் பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதார திட்டங்களும் இலங்கையின் மொத்த வளர்ச்சிக்கு உதவியது.

பிராந்திய திட்டமிடல் பணிகளுக்கு, நதிகள் துறைமுகங்கள் போன்று இயற்கைக் கனிப்பொருள் வளங்கள் செறிந்துள்ள புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த மையங்களையும் குறிப்பிடவேண்டும். காடுகள் அபிவிருத்தியில் பல மாநிலங்கள் ஒன்றிணைந்து செயல்படலாம். இன்று உலகப் பொருளாதாரத்தில் பெரிதும் வலியுறுத்தப்படும் விஷயங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்பும், உலகமயப்படுத்தப்படும் பொருளாதார நடவடிக்கைகளுமாகும். இவை இரண்டிற்கும் பிராந்திய அபிவிருத்தித்திட்டமிடல் பணி அதி உத்தமமாகும்.

## திட்டமிட்ட சனத்தொகை.

உலகம் எதிர்கொள்ளும் பல பிரச்சனைகளில் சனத்தொகைப் பெருக்கம், அதுவும் வளர்முக நாடுகளில் காணும் அதிகவிரைவான சனத்தொகைப் பெருக்கம் பொருளியல் ஆய்வாளர்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்த சனத்தொகைப் பெருக்கமானது சகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தித் திட்டங்களையும் தடம்புரளச் செய்வதோடு எதிர்காலத்தில் மனிதமேம்பாட்டிற்கான திட்டங்களையும் பொருளற்றதாக்கி விடுகிறது. அதனால் சீனா உட்பட பல நாடுகள் தமது ஒருங்கிணைத்த அபிவிருத்தித் திட்டங்களில் சனத்தொகை கட்டுப்பாட்டினை அடித்தளமாக வைத்துள்ளன

1900 ஆண்டில் 1.5 மில்லியனாக இருந்த உலக சனத்தொகை 1950 இல் 2.5 பில்லியனாகி இன்று 4 5 பில்லியனாக உள்ளது. 2000வது ஆண்டில் 6 5 பில்லியனாகும் என அஞ்சப்படுகிறது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக திட்டமிட்ட குடும்பத்திட்டம் இந்தியா உட்பட பல நாடுகளில் நடைமுறையில் இருப்பினும், சனத்தொகைப் பெருக்கம் கட்டுமீறிச் செல்கிறது. இது உடனடியாக உணவுத் தேவையினைப் பன்மடங்காக உயர்த்தியுள்ளதோடு மனித மேம்பாட்டுத்திட்டத்தில் அடிப்படைகளான கல்வி, சுகாதாரம் வேலை வாய்ப்பு என்பவற்றில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே தேசிய அபிவிருத்தியில் சனத்தொகைப் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்துவது தலையாய கடமையாக வளர்முகநாடுகள் பலவும் உணருகின்றன.

இரண்டாவது உலகப் போருக்குப் பின்பு நிகழுகின்ற அபரிமிதமான சனத்தொகைப் பெருக்கத்திற்கான காரணங்கள் பலவாகும், முதலாவதாக வாழ்க்கைத்தரம் உயர்வு, வசதிகளின் பெருக்கம், பரவலான பேறுகாலம் என்பவற்றால் இயற்கையாகவே சனத்தொகை பெருகிவருகிறது. அடுத்ததாக, முன்பு இருந்தது போன்று மரண விகிதம் இல்லாதொழிகிறது. மக்களுடைய சராசரி வாழ்வுக்காலம் எழுபதுவரை நீடிக்கிறது. வளர்முகநாடுகளில் ஏற்பட்டுவரும் பொருளாதார, சமூக அபிவிருத்திகள் காரணமாக குழந்தைகளுக்கு முறையான மருத்துவ வசதிகளும் சத்துணவும் கிடைக்கிறது. முதியோர்கள் நீண்டகாலம் வாழ்கிறார்கள். இறப்பு விகிதம் கணிசமான அளவு குறைந்திருக்கிறது. இவையே இந்த நூற்றாண்டின் சனத்தொகைப் பெருக்கத்திற்கு காரணங்களாக விளக்கப்படுகின்றன.

வளர்ந்துவரும் சனத்தொகைக்கு ஈடாக விவசாய உற்பத்தி பெருகமானால் பிரச்சனை தோன்றாது எனவும் சிலர் வாதாடுகிறார்கள் இப்பொழுது விஞ்ஞான, தொழில்நுட்ப வழிகள் மூலம் புதிய நிலங்கள் விளைநிலங்களாக மாறியும், கடந்தசில தசாப்தங்களாக ஆசியநாடுகளில் தானிய உற்பத்தி வளர்ச்சியடைந்தும் உள்ளமை உண்மைதான். ஆனால் உலக அளவில் பார்க்கும் போது ஆபிரிக்க நாடுகளில் உணவு பற்றாக்குறையினால் பட்டினிச்சாவும் நோயும் பெருகியுள்ளன. சோமாலியா போன்றவற்றில் போர்க்காலச் சூழ்நிலையினால் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. ஆகவே சனத்தொகை வளர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர உணவு உற்பத்தியும் வளரவேண்டுமென்ற வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல மேலும் சனத்தொகைப் பெருக்கத்தினால் உணவுத்தேவை பெருகுவது மட்டுமன்றி மேலும் பல தேவைகளை ஏற்படுத்தி தேசிய பொருளாதாரத்தைச் சீர்குலைத்துவிடுகிறது. எனவே நூறு வருடங்களுக்கு முன்பு வெளியான மல்தூசின் கோட்பாடு இன்றும் பயனுள்ளதாகவே தெரிகிறது. ஆகவே வளர்முக நாடுகள் தமது அபிவிருத்தித்திட்டங்களின் பயன்களை அனுபவிக்க வேண்டுமானால் சனத்தொகைப் பெருக்கத்தினை கட்டுப்படுத்துவது தான் ஒரே வழியாகும்.

பொருளியல் திட்டமிடுதலில் மிகவும் அடிப்படையான "சனத்தொகை — பொருள் வளங்களின் வளர்ச்சி" என்பதனை ஆராய வேண்டும். ஒவ்வொரு சமுதாயத்திலும் சனத்தொகை பெருகிக் கொண்டே செல்ல, அதற்கு ஈடாக வளங்கள் பெருகுவதில்லை. கடந்த சில தசாப்தங்களாக வளர்முகநாடுகள் பலப்பல அபிவிருத்தித் திட்டங்களை உருவகித்து வருகின்றன. ஆனால் அவர்கள் நினைத்த வாழ்க்கைத்தரம் உயர்தல் என்ற குறிக்கோள் எட்டப்படவில்லை. வளர்முகநாடுகள் சராசரியாக 2·5 சதவிகித சனத்தொகைப் பெருக்கத்தைக் காணுகின்றன. ஆனால் வளர்ச்சியடைந்த மேற்குலகம் 1 0 சதவிகிதத்தைக் கூட அடையவில்லை. இதற்கு மாறாக வளர்முக நாடுகளின் சனத்தொகைப் பெருக்கத்தின் காரணமாக, ஒவ்வொரு முப்பது வருட கால கட்டங்களிலும் அவர்களுடைய மொத்த சனத்தொகை இரட்டிப்பாகிறது. உதாரணமாக அல்ஜீரியாவின் இன்றைய 16 மில்லியன் சனத்தொகை, சராசரி 3 விகித அதிகரிப்பால் 285 மில்லியனாக உயருகிறது. ஒரு நூற்றாண்டு காலத்தில், ஆனால் அதன் நிலங்களோ, வளங்களோ அந்த அளவுக்கு வளரப்போவதில்லை என்கிறார் ஜார்ஜ். எப். கான்ட் அவர்கள்.

சனத்தொகைப் பெருக்கத்தில் பெரிதும் இடர்ப்படும் நாடுகள் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் உள்ளன. ஆசியாவின் பெரிய நாடுகளான சீனாவும் இந்தியாவும் ஏற்கனவே பெருமளவு சனத்தொகையைக் கொண்டுள்ளன. இவை இருநாடுகளும் தீவிரமான குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளினால் பொருளாதார அபிவிருத்தியினை எட்ட முயலுகின்றன. சீனாவின் புதிய கொள்கையில் குடும்பத்திற்கு ஒரு குழந்தை மட்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது: இந்தியாவின் குடும்பக்கட்டுப் பாட்டுக்கொள்கை, குடும்பமொன்றிற்கு இரு குழந்தைகள் மட்டும் என வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சனத்தொகைப் பெருக்கத்தால் இடர்படும் பெரிய நாடான இந்தோனேசியா மதக் கோட்பாடுகளினால் எந்தவித கட்டுப்பாட்டையும் விதிக்க முடியாதுள்ளது. உலகின் பல பகுதிகளிலும் மத அடிப்படை வாதிகளால் பல சீர்திருத்தக் கொள்கைகள் மழுங்கடிக்கப்படுவது கண்கூடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# அபிவிருத்திக்கான முகாமைத்துவம்

மனித சமுதாயத்தில் நிகழும் எல்லா சமூக, பொருளாதார மற்றும் அரசியல் செயற்பாடுகளில் முகாமைத்துவம் எனப்படும் தலைமைத்துவம் முக்கியமானதாகும். பொது நிருவாகத்தில் இதனை மிகவும் அடிப்படையானதாகக் கருதப்பட்டு வந்துள்ளது. நிருவாகத்தில் உயிர்நாடியாகக் கருதப்படும் முகாமைத்துவம் மூலமாக சகல திட்டங்களும் வரையறுக்கப் பட்டு நடைமுறைப் படுத்துவதன் மூலம் பொது வாழ்வு சிறப்படைகிறது என்கிறார் போல் அப்பலெபி அவர்கள்.

எங்கெல்லாம் சமூகச் செயற்பாடுகள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் முகாமைத்துவம் வேண்டப்படுகிறது. முகாமைத்துவம் ஒரு வகையில் பார்த்தால் வழிநடத்தலைக் குறிக்கும்; அதனால் அது தலைமைத்துவம் எனவும் கொள்ளப்படுகிறது. தலைமைத்துவதற்கு எத்தகைய பண்புகள் விரும்பப் படுகின்றனவோ அத்தகைய பண்புகள் முகாமைத்துவத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றுள் முக்கியமானவை: கொள்கைத் தீர்மானம்; கொள்கை உருவாக்கம்; திட்டமிடுதல்; ஒருங்கிணைப்பு; பயனுள்ள தொடர்பாடம் இத்தகைய பண்புகளினால் ஒரு தலைமை நிருவாகியின் சிறப்பியல்புகள் வெளிக் கொணரப்படுகின்றன.

ஒரு கைத்தொழில், அல்லது ஒரு கூட்டுத்தாபனம், அல்லது ஒரு உற்பத்தி நிலையம் என்று எதனை எடுத்துக் கொண்டாலும், அது இலாபத்தில் இயங்க வேண்டும்; தொடர்ச்சியான உற்பத்தி சேவையில் ஈடுபடவேண்டும். சமூக நலன்களைப் பாதுகாக்க வேண்டும்; ஊழியர் சேமலாப நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும், இவ்வாறு பல வழிகளிலும் பயனுள்ள சேவையினை தொடர்ந்து நிகழ்த்துவதற்கு சிறப்பான முகாமைத்துவத்தினை உடைய தலைமை நிருவாகி இன்றியமையாததாகும்.

இக்காலகட்டத்தில் முகாமைத்துவம் அபிவிருத்தி நோக்குடன் ஆராயப்படுகிறது. அதாவது அபிவிருத்தி என்பது வெறும் பொருளாதார முன்னேற்றம் மட்டுமல்ல. அது பொருளாதார வளர்ச்சியோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக அபிவிருத்தி, வாழ்க்கைத்தரம் உயருதல் எனப்பலவற்றை உள்ளடக்கியதாகும். இலங்கைபோன்ற வளர்முகநாடும் இத்தகைய அபிவிருத்தியினையே நாடுகின்றன. அதற்கு ஏற்ற முகாமைத்துவம் விரும்பப்படுகிறது. அபிவிருத்தி முகாமைத்துவம் மூலம் சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும் மக்களிடையே மறுமலர்ச்சியினை உண்டுபண்ணு கிறது.

இப்பொழுதெல்லாம் தொழிலாளர்களையும் முகாமைத்துவத்து டன் தொடர்புபடுத்தும் செயல்பாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஏற்பட்டுள்ளன. இதனை முகாமைத்துவத்தில் பங்களிப்பு என வழங்கப் படுகிறது. இது பலத்த அபிவிருத்தியினை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறுகிறார்கள். தொழிற்சாலைகளில் நிர்வாக அதிகாரிகளும் தொழிலாளர்களும் கூட்டாக, ஒற்றுமையாக செயல்படும் போது உற்பத்தி பெருகிறது. தொழிலாளி முகாமையாளர்களுடன் முறுகல் நிலையோ, எதிப்பு நிலையோ இல்லாது உற்பத்தி பெருகுகிறது. எல்லோரும் ஒரு நிறுவனத்தின் பங்காளிகள் என்ற ஒற்றுமை உணர்வு மேலோங்குகிறது.

அபிவிருத்தி நிருவாகம் சம்பந்தமாக இரண்டு அணுகுமுறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒன்று ''நிருவாக அமைப்பு அணுக'' முறை. இது அபிவிருத்தியில் பொது நிருவாக கட்டமைப்பிற்கு அதி உயர்ந்த பங்கினை வழங்குகிறது. அது சிக்கனத்தையும் ஒழுங்கு நடவடிக்கை களையும் வற்புறுத்துகிறது. இரண்டாவது சமூக அமைப்பு கோட்பாடு ஆகும். இதில் சமுதாய பின்னணிகளான நிறுவனங்களுக்கு முக்கியத் துவம் கொடுத்து, ஒருமித்த வளர்ச்சியை வற்புறுத்துகிறது. அதாவது. அபிவிருத்தி நிருவாகம் சமுதாயத்தோடு இணைந்ததாக இருக்க வேண்டும். ஆகவே இந்த அணுகு முறையில் பல சமூகப் பொருளாதார சீர்திருத்தங்களை நிருவாகம் வேண்டி நிற்கிறது.

முகாமைத்துவம் சம்பந்தமான அபிவிருத்தி சிந்தனைகள் இன்று வளர்முகநாடுகள் எங்கும் பரவியுள்ளது. இதன் மூலம் சமூக பொருளாதார மற்றும் அரசியல் அபிவிருத்தியினை ஏற்படுத்தி சகல மக்களினதும் வாழ்க்கைத் தரம் உயரவும் வசதிகள் சீரடையவும் வழி யுண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நூலின் பின்னணி

"அபிவிருத்தி நிருவாகம்" எனும் இந்நூல் ஒரு பாடநூல் அல்ல; இது ஒரு ஆழமான ஆய்வு நூலுமல்ல; எந்த ஒரு நூலின்தழுவலும் அல்ல! சமூக நீதி எனும் அடிப்படையில் தம்மையெல்லாம் ஆட்டிப் படைக்கும் பொது நிருவாகத்திற்கு அபிவிருத்திக் கண்களை புகுத்தியிருக்கிறேன். இதனைக் கொண்டு நிருவாகிகள் புதிய சமூகப் பார்வையினை ஏற்படுத்திக் கொள்வார்களா? அல்லது நமது மாணவ சமுதாயம் மேலதிக அபிவிருத்தி நோக்குகளைப் பெறவும் சமூக அபிவிருத்தியில் ஒரு உந்து சக்தியாக வளக்கவும் இக்கைநூல் உதவும்.

இதனை எழுதுவதற்குமுன்பு இரண்டு ஆண்டுகள் அரசறிவியல் சிறப்புச்கலை மாணவர்களுக்கு அபிவிருத்தி நிருவாகம் என்ற கற்கை நெறியினை கற்பித்தலில உதவியிருக்கின்றேன், இந்தியா, மலேசியா போன்ற வளர்முக நாடுகளில் அபிவிருத்தி நிருவாகம் கற்கை நெறியாக சமூக விஞ்ஞான பீடங்களில் அமைந்துள்ளன. நமது இலங்கைப் பல்கலைக்கழகங்களில் சமூக விஞ்ஞானங்கள் பாரம்பரியமான கலைப் பீடங்களுள் அமுங்கிப்போய்யுளன. அதனால் பொது நிருவாத்துறை இலைமறை காயப் போல் மறைத்து விட்டது.

*DEVELOPMENT ADMINISTRATION*
*George F. Gant*
*University of Wiseonsin Press 1979*

அபிவிருத்தி நிருவககம் சமபந்தமான ஒரு முழு நீள (350 பக்கங்கள்) நூல் இதுவாகும். இது மாணவர்களுக்கு மிக உபயோகமாக இருப்பதோடு யதார்த்தமான பல நோக்குகளில் ஆராய்கிறது. இது ஒரு அமெரிக்க பல்கலைக்கழக ஆய்வு வெளியீடாகும், பேராசிரியர் ஜி. எப் காண்ட் அவர்கள் ஐ. நா. அமைப்புகளுடன் நீண்டகாலம் தொடர்பு கொண்டவர், போாட் பவுண்டேசனில் உறுப்பினாராகவும் உள்ளார்.

*BUREAUCRACY AND*
*POLITICAL DEVELOPMENT*
*Joseph La Polawbara (Ed)*
*Princeton University Press 1963*

ஜோசப் லா பொலம்பாரா அமெரிக்க பல்கலைக்கழகங்களில் சமூக விஞ்ஞான ஆராய்ச்சியில் ஒரு பிரசித்தமான ஆய்வாளர். அவர் நீண்டகாலமாக அரசறிவியல், பொது நிருவாகம் ஆகிய துறைகளில் ஆய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுகள் செய்து நூல்களை வெளியிட்டுள்ளார். ஒரு காலத்தில் நம்மை யெல்லாம் ஆட்டிப் படைத்த பொது நிருவாக பண்க்குழு சம்பந்தமாகவும் அரசியல் அபிவிருத்தி என்பது பற்றியும் பல கட்டுரைகளை உள்ளடக்கியது மேற்படி நூலாகும்.

*DEVELOPMENT ADMINISTRATION IN INDIA*
*V. A. Pai Panadikar*
*Macmillan and Company. Bombay 1977*

பை பனாடிக்கரி பம்பாய் பல்கலைக்கழகத்திலும் பின்பு டில்லியிலுமாக 25 ஆண்டுகளுக்கு மேலாக அபிவிருத்தி நிருவாகம் சம்பந்தமாக எழுதிவருகிறார். டில்லியிலுள்ள பொது நிருவாக ஆய்வு நிறுவனத்தில் அங்கத்தவராக இருந்து ஆய்வு சஞ்சிகைகளில் கட்டுரைகள் பல வெளியிட்டுள்ளார். பை பனாடிக்கர் அண்மையில் '' அபிவிருத்தி நிருவாகம் பற்றி சித்தாந்தம்'' என்ற நூலினை வெளிட்டுப் புகழ் பெற்றுள்ளார்.

12545 SC

*Sri Lanka Acadamy of Administrative Studies* என்ற நிறுவனம் கொழும்பிலிருந்து பொது நிருவாக சேவை பற்றிய பல ஆய்வுகளை வெளியிட்டிருக்கிறது. இந்த நிறுவனம் பொதுநிருவாக உத்தியோகத்தர்கள் வங்கி ஊழியர்கள், முகாமைத்துவ பணியாளர்கள் பலருக்கும் பயிற்சி அளிக்கிறது. அது வருடத்தில் இரண்டு முறை வெளிவரும் *THE JOURNAL OF DEVELOPMENT ADMINISTRATION* சஞ்சிகையினை வெளியிடுகிறது.


ஆகவே பல காரணங்களினால் மிகவும் உபயோகமானது, நமது சமூக விழிப்புணர்வுக்கு வேண்டப்படுவதுமான இந் நூலினை தங்கள் சிந்தனைக்கு முன்வைக்கின்றேன். சென்ற ஆண்டு நடுப்பகுதியில் நண்பர் கலாநிதி ஏ. வி. மணிவாசகர் அவர்கள் "*DEVELOPMENT ADMINISTRATION*" என்ற நூலை வெளியிட்டு நமது யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைக்கு பெருமையூட்டினார். எங்கள் மாணவர்களும் பல்கலைக்கழக ஆசிரியர்களும் எமது முயற்சியினை ஊக்குவிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இப் "பின்னணி" உரையினை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியரின் பிற ஆக்கங்கள்

- ★ பொது ஆட்சியியல்
- ★ POLITICAL COMMUNICATIONS
- ★ சர்வதேச அரசியல்
- ★ VALUES IN THIRUVALLUVAR

ST. Joseph's Catholic Press Jaffna — 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org